# விலகு, விபரீதம்!

## 1

ராம்ஜே பைனான்ஸ் கார்ப்பரேஷன். மத்தியானம் மூன்று மணி லெட்ஜர் பக்கங்களோடு இன்வாய்ஸ் பில்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகா பியூன் பக்கத்தில் வந்து நின்று ''அம்மா'' என்று குரல் கொடுத்ததும் நிமிர்ந்தாள்.

''என்ன பொன்னுசாமி?''

''உங்கப்பா வந்திருக்காரும்மா.''

லெட்ஜரை 'டொம்'மென்று சாத்தி பேனாவை மூடி வைத்துவிட்டு எழுந்தாள். மனசுக்குள் லேசாய் எரிச்சல் மேலிட்டது.

'அப்பா... எதற்காக வந்திருப்பார்...?'

'என்னைப் பார்த்துப் பேச ஆபீசுக்கெல்லாம் வரக்கூடாது என்று சொல்லியும் வந்திருக்காரே...?'

''விஷயம் ஏதாவது முக்கியமானதாக இருக்குமோ?'

யோசித்துக் கொண்டே...

வரவேற்பறைக்குப் போனாள்.



வியர்த்து வழிகிற முகத்தோடு - குடையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு - பெஞ்சுக்கு சாய்ந்து உட்கார்ந்திருந்த சிவசாமி புன்னகையோடு மகளைப் பார்த்தார். உடம்பில் அறுபது வயது தளர்ச்சி.

''என்னம்மா... முக்கியமான வேலையில் இருந்தியா...?''

''ம்...'' என்று முனகியவள் கொஞ்சம் கோபம் கலந்த குரலில் கேட்டாள். ''இந்த வேகாத வெய்யிலில் எதற்காக வந்திருக்கீங்க...?''

''காரியமாத்தாம்மா வந்திருக்கேன்...'' சொல்லிக் கொண்டே தன் சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து ஒரு கடிதக் கவரை எடுத்து மகளிடம் நீட்டினார் சிவசாமி.

''என்ன... லெட்டர்...?''

''பிரிச்சு படிச்சுப் பாரம்மா...''

ராதிகா கவருக்குள்ளிருந்த லெட்டரை எடுத்துப் பிரித்துப் படித்தாள். அவசரமாய் எழுதப்பட்ட கிறுக்கல் எழுத்துக்களில் வரிகள் ஓடியிருந்தது. பார்வை வரிகளின் மேல் அலைந்தது.

*அன்புள்ள திரு. சிவசாமி அவர்களுக்கு*

*கோபாலரத்தினம் எழுதிக் கொண்டது. வணக்கம். க்ஷேமம் க்ஷேமத்திற்கு கடிதம் எழுதுங்கள். இப்பவும் சென்ற புதன்கிழமை உங்கள் மகள் சௌபாக்கியவதி ராதிகாவைப் பெண் பார்க்க வந்ததில், எனக்கும் - என் மனைவிக்கும் உங்கள் மகளைப் பிடித்துப் போயிற்று. ஊரிலிருந்து வந்த என் மகளும் மாப்பிள்ளையும் உங்கள் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். திங்கட்கிழமை சாயந்தரம் ஆறு மணிக்கு உங்கள் வீட்டுக்கு வருகிறார்கள். அதுசமயம் உங்கள் பெண்ணை ஆபீசிலிருந்து சீக்கிரம்*

*வரவழைத்து அவர்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்யுங்கள். ராதிகாவை அவர்களுக்குப் பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் ஒரு சம்பிரதாயத்துக்காக அவர்கள் வருகிறார்கள். எனது மகளையும், மருமகனையும் கலந்து ஆலோசித்தபின் - நம் இரு குடும்ப ஜோதிடர்களையும் கலந்து முகூர்த்த தேதியை முடிவு செய்து கொள்வோம். வேணும் சுபம்.*

*இப்படிக்கு*
*அன்புள்ள*
கோபாலரத்தினம்

கடிதத்தை முடித்துவிட்டு நிமிர்ந்தாள் ராதிகா. அவளுடைய அழகிய மூக்கு சிவந்து போயிருந்தது. கோபாலரத்தினம் சொன்னார்.

''இன்னிக்கு திங்கட்கிழமை ஆறு மணிக்கெல்லாம் அவங்க வந்துடுவாங்க...''

''ஏம்பா! அவங்க மனசுல என்னதான் நினைச்சுட்டுருக்காங்க! பொண்ணு பார்க்கிறதாய் இருந்தா எல்லாரையும் ஒரே சமயத்துல கூட்டிட்டு வரவேண்டியதுதானே? இதென்ன தவணை முறை...? இன்னைக்கு என்னைப் பார்க்க மகளும் மருமகனும் வருவாங்க... நாளைக்கு அவங்களோட சித்தியும் சித்தப்பாவும் வருவாங்க... நான் என்ன ஆடா... மாடா? நினைச்ச நேரமெல்லாம் இழுத்துட்டு கொண்டு போய் காட்டறதுக்கு...?''

''கோபப்படாதேம்மா. இதெல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு சாதாரணம்...''

''உங்களுக்கு சாதாரணமா இருக்கலாம். ஆனா எனக்கு அவமானமா இருக்கு... மாப்பிள்ளை வீட்ல நினைச்சு... நினைச்சு... ஒவ்வொருத்தரா வருவாங்க... அவங்க வர்றப்பலெல்லாம் பட்டுச் சேலையைக் கட்டிக்கிட்டு... கொலு பொம்மை மாதிரி சிங்காரிச்சுட்டு எதிரில் போய் நிக்கணுமாக்கும்...?''



சிவசாமி புன்னகைத்தார்.

''நீ அப்படி கோபப்பட்டு... படபடன்னு பொரிஞ்சு தள்ளுவேன்னு நினைச்சுத்தான்... போன் பண்ணி விஷயத்தைச் சொல்லாமே... நேர்ல வந்தேன்...''

''எனக்கு இதெல்லாம் பிடிக்கலேப்பா... மாப்பிள்ளையை இதே மாதிரி பார்க்கப் போனா... அவங்க ஒத்துக்குவாங்களா...?''

''இதே பாரம்மா... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க என்னிக்கும் உசத்திதான். உன் கழுத்துல தாலி விழற வரைக்கும் நாம கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணித்தான் போணும்...''

''ஏன் அவங்களுக்கு நாம ஏதாவது அடிமை சாசனம் எழுதிக் குடுத்துட்டோமா...?''

''நீ அப்படியெல்லாம் பேசறது சரியில்லேம்மா... இப்ப நமக்கு வாய்ச்சிருக்கிறது நல்ல சம்பந்தம். மாப்பிள்ளை பி.இ. படிச்சிட்டு நல்ல வேலையில் இருக்கிறவர். சின்னக் குடும்பம். வரதட்சணை ஒரு பைசா வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க...''

''முப்பது பவுன் நகை கேட்டிருக்காங்களே... அதுக்கு பேரு என்னவாம்? கல்யாணச் செலவை நாம்தான் ஏத்துக்கணும்னு சொல்லியிருக்காங்களே...? அதுக்கு என்ன அர்த்தமாம்?''

''அதெல்லாம் நாம பண்ண வேண்டியதுதாம்மா...?''

''சரி... நான் இன்னிக்கு எத்தனை மணிக்கு வரணும்...?''

''அஞ்சு மணிக்கெல்லாம் நீ வீட்ல இருக்கணும்... உன்னோட அம்மாவுக்கு பழையபடியே மூட்டுவலி வந்துடுச்சு... படுத்துட்டிருக்கா... நீ வந்துதான் வர்றவங்களுக்கு ஏதாவது டிபன் பண்ணணும்.''

''வர்றேன்...''

''லேட் பண்ணாமே வந்துடும்மா...''

''ம்...ம்...''

சிவசாமி எழுந்தார். ''இப்ப வீட்டுக்கு போறப்பவே பூவும் ஸ்வீட்டும் வாங்கிட்டுப் போயிடறேன்.''

தலையாட்டினாள் ராதிகா. அவர் ஆபீஸ் காம்பவுண்ட் கேட்டைத் தாண்டும் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு உள்ளே போனாள்.

தன் சீட்டுக்குப்போய் உட்கார்ந்ததும் பக்கத்து சீட்டில் உட்கார்ந்து டைப் மெஷினைத் தட்டிக் கொண்டிருந்த உஷா கேட்டாள்.

''வந்தது யாரு... அப்பாவா?''

''ஆமா...''

''என்ன இந்த நேரத்துல...?''

''அன்னிக்கு என்னைப் பெண் பார்த்துட்டுப் போனவங்களோட மாப்பிள்ளையும் பெண்ணும்... ரெண்டாவது தவணை முறையில் பெண் பார்க்க வர்றாங்களாம்...''

உஷா புன்னகைத்தாள். ''பெண்ணைப் பெத்தவங்கன்னாலே எல்லாருக்கும் ஒரு இளப்பம்... என்னோட கல்யாணத்திலும் இப்படித்தான் நோகடிச்சுட்டாங்க. மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு நமஸ்காரம் பண்ணிப் பண்ணியே... என் இடுப்பு கழண்டு போச்சு.''

''எனக்கு அப்படி ஆத்திரம் வருது... அப்பா அம்மாவுக்காக பல்லைக் கடிச்சுட்டு இருக்க வேண்டியிருக்கு...''

''எத்தனை மணிக்கு வீட்டுக்குப் போகணும்?''

''அஞ்சு மணிக்கு! ஆறு மணிக்கு அவங்க வர்றாங்களாம்.''



''அப்படீன்னா... நீ நாலு மணிக்கே பர்மிஷன் கேட்டுட்டு கிளம்பு...''

''ஆமா...''

''மானேஜர் வெளியே எங்கேயோ கிளம்பிட்டிருக்கார்... பர்மிஷன் கேட்கிறதாய் இருந்தா... இப்பவே போய் கேட்டுரு...''

''அவர் எங்கே போறார்...?''

''தெரியலை.''

ராதிகா எழுந்து மானேஜரின் அறையை நோக்கிப் போனாள். அவருடைய கேபினை நெருங்கிய போது - உள்ளே டெலிபோனில் கத்திப் பேசிக் கொண்டிருக்கிற சத்தம் கேட்டது.

''ஆமா... ஆமா... இந்த மாசம் எப்படியும் டெபாசிட் அமௌண்ட் டார்ஜெட்டைத் தாண்டிடனும்... இல்லேன்னா எம்.டி.யை நான் ஃபேஸ் பண்ண முடியாது... டெப்பாசிட்டர்களுக்கு வேணும்னா ஒரு இன்சென்டிவ் குடுத்துடுவோம்... அப்பப்ப பெட்டி காம்ப்ளிமெண்ட்ஸையும் தரணும்... அதுக்கொரு அமௌண்ட்டை ஒதுக்கிடலாம்... நான் எம்.டி.கிட்டே சொல்லிக்கிறேன்... நோ... ப்ராப்ளம்...''

மானேஜர் ரிஸீவரை வைக்கட்டும் என்று கதவுக்கு வெளியே காத்திருந்தாள். மனிதர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

''தெரியும்... எனக்கு நல்லாவே தெரியும். ஜனங்களுக்கு பிரைவேட் பைனான்ஸ் கம்பெனிகள் மேல அவ்வளவு சுலபமா நம்பிக்கை வர்றதில்லை. ரெண்டு மூணு போகஸ் கம்பெனிகள் ஏமாத்திட்டு போயிட்டதினால... ஜனங்க அலர்ட்டா இருக்காங்க... நாமதான் அவங்களைக் கன்வின்ஸ் பண்ணணும். உண்மையை எடுத்துச் சொல்லணும்...''

''சரி... நான் இப்போ வெளியே கிளம்பிட்டிருக்கேன். நாளைக்கு காலையில ஆபீசுக்கு வாங்க பேசிக்கலாம்...'

ரிஸீவரை வைத்தார்.

ராதிகா கதவைத் தட்டினாள்.

''எஸ்... கம்... இன்...''

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனாள்.

''வாம்மா... ராதிகா...''

மானேஜர் திருமூர்த்தி புன்னகைத்தர்.

''ஸ...ஸார்... வந்து...''

''என்னம்மா...?''

''ஒன் ஹவர் பர்மிஷன் வேணும்...''

''எதுக்கு...?''

''வீட்ல ஒரு விசேஷம்...''

''விசேஷம்ன்னா...?''

''என்னைப் பெண் பார்க்க வர்றாங்க...''

''போன புதன்கிழமையும் இதே காரணத்தைத்தான் சொன்னே?''

''ஸார்... இது ரெண்டாவது கோட்டா!'' சொன்னவள் தன்னுடைய அப்பா வந்து போனதை விளக்கினாள்.

''நாலு மணிக்குத்தானே போகணும்?''

''ஆமா... ஸார்.''

''லாஸ்ட் இயர் பாலன்ஸ் ஷீட்டைக் காலையிலேயே கேட்டிருந்தேனே... பிரிப்பேர் பண்ணிட்டியா...?''



''பண்ணிட்டிருக்கேன் ஸார்.. சில இன்வாய்ஸ் பில்கள் மிஸ்ஸாகியிருந்தது. அதான் அப்படியே வெச்சுட்டேன்...''

''என்னம்மா நீ... பில்கள் மிஸ்ஸாகியிருந்தா ரிக்கார்ட் ரூமுக்குப் போய் பைல்களைப் பார்த்து புரட்டினா கிடைக்குது...''

''நாளைக்கு வந்து...''

''நோ... நோ... இன்னைக்கு அந்த பர்ட்டிகுலர்ஸ் எனக்கு வேணும்மா... ஒரு அரைமணி நேர வேலைதான். முடிச்சுக் குடுத்துட்டு நீ வீட்டுக்குப் போயிடலாம்.''

''சரி ஸார்...''

''நான் இப்போ வெளியே கிளம்பிட்டிருக்கேன். நீ அந்தப் பர்டிகுலர்ஸை ரெடி பண்ணி என் மேஜை மேல் வெச்சுட்டுப் போயிடு...''

தலையாட்டிவிட்டு வெளியே வந்தாள்.

தன்னுடைய சீட்டுக்குப் போகும்முன் வழியில் ஹெட்கிளார்க் டேபிளின் மேல் இருந்த டெலிபோனைப் பார்த்ததும் நின்றாள். ஆபீஸ் காண்டீனுக்கு போயிருக்கிற ஹெட்கிளார்க் வருவதற்குள் போன் பேசிவிட நினைத்து ரிஸீவரை எடுத்து சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு டயலைத் தட்டினாள்.

ரிங் போய் மறுமுனையில் ரிஸீவர் எடுக்கப்பட்டது. ராதிகா மெல்லிய குரலில் கேட்டாள். ''ஹலோ... சாம்ராட் ரோட்வேஸ்?''

''எஸ்...''

''மிஸ்டர் அகமது இருக்காரா?''

''இருக்கார்...''

''அவர்கிட்டே பேசணும்...''

"ஒரு நிமிஷம் லைன்ல இருங்க..."

காத்திருந்தாள்.

சில விநாடிகளுக்குப் பின் அந்த ஆண் குரல் கேட்டது.

"ஹலோ..."

"அகமது நான் ராதிகா..."

"என்ன...?"

"போன புதன்கிழமை என்னைப் பெண் பார்த்துட்டு போனவங்களுக்குப் பிடிச்சுடுச்சாம்... அநேகமாக இந்தத் தடவை கல்யாணம் ஒரு முடிவுக்கு வந்துடும் போலிருக்கு. இன்னைக்குக் கூட மாப்பிள்ளை வீட்டிலிருந்து அவங்க மகளும் மாப்பிள்ளையும் என்னைப் பெண் பார்க்க வர்றாங்க... நீங்க என்ன பண்ணப் போறீங்க? என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதா எண்ணம் இருக்கா...? இல்லை காதல் தோல்வியால் தாடி வளர்த்துக்கப் போறீங்களா...?"

"என்ன ராதிகா இப்படிப் பேசறே...?"

"பின்னே என்னங்க...? போன வாரமே என்னைப் பெண் பார்க்க வர்றாங்கன்னு சொன்னேன். வந்துட்டு போகட்டும்னு சொன்னீங்க... வரதட்சணைப் பிரச்சனையால கல்யாணம் நின்னுடும்னு நானும் நம்பிக்கையோடு இருந்தேன். ஆனா... வந்த மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரதட்சணை வேண்டாம்... பெண்ணை எங்களுக்குப் பிடிச்சுருக்குன்னு சொல்லிட்டாங்க. அப்பா நாயிலிருந்து கல்யாண ஏற்பாடுகளைப் பண்ண ஆரம்பிச்சிடுவார் போலிருக்கு... இனிமேலும் நாம நிதானம் காட்டுவது சரியில்லை..."

"சரி... நாளைக்கு ஒரு முடிவுக்கு வந்துடலாம்..."

"நிஜமா...?"

"நிஜமோ நிஜம்..."



## 2

**வா**சலில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டு ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தார் சிவசாமி. பதட்டமடைந்தார்.

"கோகிலம்..."

"என்னங்க...?"

அவருடைய மனைவி ஓடி வந்தாள்.

"அவங்க வந்துட்டாங்க..."

"வந்துட்டாங்கன்னு சொல்லிட்டு... இங்கேயே நிக்கறீங்க... வாசலுக்குப் போங்க..."

சிவசாமி வாசலுக்கு ஓடினார். வாசற்படி ஏறிக் கொண்டிருந்த இளைஞனையும் பெண்ணையும் பார்த்துக் கைகளைக் குவித்தார். கோகிலமும் வந்து வரவேற்றாள்.

"வாங்க... வாங்க..."

இளைஞன் சிரித்தான். "ஆறு மணிக்கு வர்றேன்னு சொல்லிட்டு... அஞ்சரை மணிக்கே வந்துட்டோம்..."

"அதனால் என்னங்க பரவாயில்லை... நம்ம வீடுதானே...? வாங்க உட்காருங்க..."

அவர்கள் உள்ளே வந்து சோபாக்களில் உட்கார்ந்ததும் சிவசாமி - கோகிலத்தோடு சமையலறைக்குள் நுழைந்தார்.

"இவங்க வந்துட்டாங்க... இன்னும் ராதிகாவை காணோமே...?"

"அஞ்சு மணிக்கே வந்துடுவான்னு சொன்னீங்க...?"

"ஆமா..."

"ஒருவேளை மறந்துட்டாளோ...?"

"அதெப்படி மறப்பா...?"

"சரி... நீங்க போய் அவங்ககூட உட்கார்ந்து பேசிட்டிருங்க... அதுக்குள்ளே அவ வந்தாலும் வந்துடுவா..."

சிவசாமி தோளில் போட்டிருந்த துண்டை சரிப்படுத்திக் கொண்டே முன்னறைக்குப் போய் அவர்களுக்கு எதிரே இருந்த நாற்காலியில் ஒரு அவஸ்தையான சிரிப்போடு உட்கார்ந்தார்.

"பயணம் எல்லாம் சௌகரியமாய் இருந்ததுங்களா...?"

"ம்..."

"நீங்க என்ன பண்றீங்க தம்பி...?"

"சிட்டி கோபரேஷன் பாங்க்ல...காஷியரா இருக்கேன்...! அன்னைக்கு எனக்கு பேங்க் லீவு கிடைக்கலை... அதான் பெண் பார்க்கிற அந்த நிகழ்ச்சிக்கு வர முடியலை... இப்ப தனியா வந்து பார்க்கிறதுல... உங்களுக்கு எந்த அசௌகரியமும் இல்லையே...?"

"சேச்சே...!"

"பொண்ணைக் கூப்பிட்டீங்கன்னா... உடனே பார்த்துட்டு அடுத்த பஸ்ஸுக்கு கிளம்பிடுவோம்..."

"பொண்ணு இன்னும் ஆபீசிலிருந்து வரலை..."

"நீங்க முன்னாடியே தகவல் சொல்லலையா...?"

"ஆபீசுக்கே போய் விஷயத்தை சொல்லிட்டு வந்தேன். என்ன காரணமோ தெரியலை... இன்னும் வரலை..."

"உங்க பொண்ணு எந்தக் கம்பெனியில் வேலை பார்க்குது?"



"ராம்ஜே பைனான்ஸிங் கார்ப்பரேஷன்ஸ்ல அஸிஸ்டெண்ட் அக்கவுண்டண்டா இருக்கா..."

"என்ன படிச்சிருக்கு?"

"பி.காம்..."

"அத்தைக்கும் மாமாவுக்கும் பொண்ணை ரொம்பவும் பிடிச்சப் போச்சு... நாங்க பார்க்க வந்தது சும்மா சம்பிரதாயத்துக்குத்தான்..."

"நீங்க வந்ததுல எங்களுக்கு சந்தோஷம்தான்..." சொன்ன சிவசாமி எழுந்து கொண்டார். "நான் தெரு முனையில் இருக்கிற டெலிபோன் பூத்துக்குப் போய் ராதிகாவுக்கு போன் பண்ணிப் பார்த்துட்டு வர்றேன்..."

தவிப்போடு வெளியே வந்து வேக நடையில் தெரு முனையைத் தொட்டு அங்கிருந்த டெலிபோன் பூத்துக்குள் நுழைந்தார். கண்ணாடிக் கதவை சாத்திக் கொண்டு ரிஸீவரை எடுத்து ராம்ஜே பைனான்ஸிங் கார்ப்பரேஷனைத் தொடர்பு கொண்டார்.

"ஹலோ... ராம்ஜே பைனான்ஸிங்..."

"யெஸ்..."

"நான் ராதிகாவோட அப்பா பேசறேன்..."

"சொல்லுங்க சார்... நான் டெஸ்பாட்ச் பூபதி பேசறேன்..."

"ராதிகாவோட பேசணும்... கொஞ்சம் கூப்பிடறீங்களா...?"

"லைன்ல இருங்க ஸார்... கூப்பிட்டு விடறேன்..."

சிவசாமி நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை மேல் துண்டால் ஒற்றியபடி காத்திருந்தார். அரை நிமிஷ நேரத்திற்குப் பிறகு ரிஸீவர் எடுக்கப்பட்டு குரல் கேட்டது. டெஸ்பாட்ச் பூபதியே பேசினான்.

''ஸார்... ராதிகா ஸீட்ல இல்லை... நாலரை மணிக்கே புறப்பட்டு போயிட்டாங்களாம். பர்மிஷன் போட்டிருக்காங்களாம்...''

''நாலரைக்கே புறப்பட்டாளா?''

''ஆமா...''

''இப்ப மணி அஞ்சு நாற்பது... இன்னும் வீட்டுக்கு வந்து சேரலையே...''

''வந்துடுவாங்க சார்... ஆன்... த... வே...யில் இருப்பாங்க...'' டெஸ்பாட்ச் பூபதி சொல்லவும் - சிவசாமி ரிஸீவரை வைத்துவிட்டு டெலிபோன் பூத்தைவிட்டு வெளியே வந்தார். ராதிகாவின் மேல் கோபம் வந்தது.

''கொஞ்சம்கூட பொறுப்பில்லாத பெண். நாலரைக்கே புறப்பட்டவள் உடனே வீடு வந்து சேர்ந்திருக்க வேண்டாமோ...?''

''செல்லம் கொடுத்துக் கொடுத்து ரொம்பவும்தான் துளிர்த்துப் போய் விட்டாள். இன்றைக்கு வந்தால் நறுக்கென்று நாலு வார்த்தை பேச வேண்டும்.''

ஆத்திரமாய் யோசித்தபடியே வீட்டுக்கு வந்தார். மனைவி கோகிலம் வாசலிலேயே காத்திருந்தாள். உள்ளே இருப்பவர்களுக்கு குரல் கேட்டு விடாமல் கணவனிடம் கிசுகிசுத்தாள். ''என்ன... அந்தக் கடங்காரி... இன்னும் ஆபீஸிலேயே இருக்காளா...?''

''இல்ல... நாலரை மணிக்கே புறப்பட்டுட்டாளாம்...''

கன்னத்தில் கை வைத்தாள் கோகிலம். ''நாலரைக்கே புறப்பட்டாளா? அப்படின்னா... அஞ்சு மணிக்கெல்லாம் வந்திருக்கணுமே...''

''வந்திருக்கணும்தான் வரலையே...''

''இப்ப என்னங்க பண்றது?''



''வந்திருக்கிறவங்களுக்கு மொதல்ல டிபனைக் கொடு... அவங்க சாப்பிட்டு முடிக்கிறதுக்குள்ளே வந்துடுவா...''

இருவரும் உள்ளே போனார்கள். அந்த இளைஞனும் பெண்ணும் நிமிர்ந்தார்கள்.

''ராதிகா புறப்பட்டுட்டாளாம்...நீங்க டிபன் சாப்பிடுங்க... அதுக்குள்ளே வந்துடுவா...''

கோகிலம் அவர்களுக்கு டிபனைப் பரிமாறினாள்.

சிவசாமியின் கண்கள் வாசலையும், சுவர் கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தன.

நேரம் 5.50... 5.55... 6.00...

வந்தவர்கள் தாம்பூலத்தை மென்றுவிட்டு சிவசாமியின் முகத்தை ஏறிட்டார்கள். சிவசாமி முள் முனையில் உட்கார்ந்திருப்பவரைப் போல் நெளிந்தார்.

6.05... 6.10... 6.15...

வந்தவர்கள் எழுந்தார்கள். அந்தப் பெண் சொன்னாள்.

''மன்னிக்கணும்... ஆறே முக்காலுக்கு எங்களுக்கு பஸ். எனக்கு அண்ணியா வரப்போகிற பெண்ணைப் பார்க்கணும்னு ரொம்பவும் ஆசையோடு வந்தேன். என்ன காரணமோ உங்க பொண்ணு வரலை... நாங்க புறப்படறோம்...''

கைகளைக் குவித்துவிட்டுப் போய் விட்டார்கள்.

சிவசாமி தோளில் இருந்த துண்டை உதறி கொடியின் மேல் வீசிவிட்டு அறையின் குறுக்கேயும் நெடுக்கேயும் ஆத்திரமாய் நடை போட்டார். கோகிலத்தைப் பார்த்துக் கத்தினார். ''பார்த்தியாடி உம் பொண்ணோட லட்சணத்தை. இந்த சம்பந்தம் கைகூடி வரும்ன்னு நினைக்கிறியா...? நிச்சயமா முடியாது... பெண்ணும்

மாப்பிள்ளையும் போய் விஷயத்தை சொல்வாங்க. அந்த ஆளுக்கு கோபம் வரும்... கல்யாணத்துக்கு முன்னாடியே இந்தப் பெண் இப்படி இருக்காளேன்னு நிர்த்தாட்சண்யமா மறுத்துடப் போறாங்க... இந்தக் கல்யாணம் கைகூடி வரப்போறதில்லை...''

''பாவிப் பொண்ணு...! இப்படிப் பண்ணிட்டாளே...?''

''அவ மனசுல எதையோ நினைச்சிட்டிருக்காடி... அது என்னான்னு... இன்னைக்குத் தெரிஞ்சாகணும்...''

சுவர் கடிகாரம் நேரத்தை நொண்டியது.

6.20... 6.25... 6.30...

வாசலில் காலடிச் சத்தம் கேட்டது.

''கடன்காரி வர்றா...''

கோகிலம் இரைந்து கத்திக் கொண்டே வாசலுக்குப் போனாள்.

## 3

வாசலுக்கு வந்த கோகிலா சட்டென்று ஏமாற்றத்துக்குள் விழுந்தாள்.

வந்தது ராதிகா இல்லை.

அவளுக்கு ரொம்பவும் நெருக்கமான - அடுத்த தெருப் பெண் சுமதி. கோகிலம் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு ''வா சுமதி...'' என்றாள்.

''ராதிகா ஆபீசிலிருந்து வந்துட்டாளா...?''

''இன்னும் வரலை...''



''அவ வந்தா... இந்தப் புத்தகத்தை குடுத்துடுங்கம்மா... போன வாரம் அவகிட்டேயிருந்து வாங்கிட்டுப் போனேன்... காலையில வழியில் பார்த்து சத்தம் போட்டா... அதான் கொண்டு வந்தேன்... குடுத்துடறீங்களாம்மா...?''

''ம்...''

''ஏம்மா ஒரு மாதிரியா இருக்கீங்க...? உடம்பு சரியில்லையா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. லேசா மூட்டுவலி. அவ்வளவுதான்...''

''சரி... வர்றேம்மா...'' - சொல்லிவிட்டு கிளம்ப முயற்சித்த சுமதியை சிவசாமியின் குரல் நிறுத்தியது.

''ஒரு நிமிஷம்... உள்ளே வந்துட்டுப் போம்மா...''

சுமதி உள்ளே வந்தாள். சிவசாமி கேட்டார். ''ஏம்மா ராதிகா தன்னோட கல்யாணத்தைப் பத்தி உன்கிட்ட ஏதாவது சொன்னாளா...?''

''ம்... சொன்னா... யாரோ... அவளைப் பெண் பார்த்துட்டு போயிருக்கிறதா நேத்து கோயில்ல பார்த்தப்ப சொன்னா...''

''அவளுக்கு இந்தக் கல்யாணம் பண்ணிக்கிற விஷயத்தில் சந்தோஷம்தானே...?''

''அவ பேசினதைப் பார்த்தா... அப்படித் தெரியலை...''

''என்ன பேசினா...?''

''கல்யாணம் இப்ப வேண்டாம்னு சொன்னா... வீட்ல கேக்க மாட்டேங்கறாங்க... என்ன பண்றதுன்னே தெரியலைன்னு சொன்னா...''

''அவளுக்கு ஏன் கல்யாணம் வேண்டாமாம்...?''

''இந்தக் கேள்வியையும் கேட்டேன். ஆனா... அதுக்கு அவ பதில் சொல்லலை...''

''அவ மனசுல வேற யாரையாவது நினைச்சுட்டிருக்காளா...?''

''அந்தக் கேள்வியைக் கேட்டேன்...''

''என்ன சொன்னா...?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைன்னு சிரிச்சு மழுப்பிட்டா ஆனா எனக்கொரு சந்தேகம்... அங்கிள்...''

''என்ன...?''

''ராதிகா யாரையோ விரும்பற மாதிரி என் மனசுக்குப்படுது...! ஏன்னா போன மாசம் அவளை பஸ்ஸ்டாண்ட்ல பார்த்துப் பேசிக்கிட்டு இருந்தப்ப... அவ கையில் வெச்சிருந்த புக்கிலிருந்து ஒரு பர்த்டே க்ரீட்டிங் கார்டு கீழே விழுந்தது. நான்தான் எடுத்துக் கொடுத்தேன். அந்த கிரீட்டிங் கார்டில் இருந்த படங்களும் - வாசகமும் வித்தியாசமா இருந்தது. உங்களுக்கு புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன். அதையெல்லாம் வெச்சுப் பார்க்கும் போது ராதிகாவோட கல்யாண விஷயத்துல நீங்க அவசரம் காட்றது சரியில்லைன்னு என் மனசுக்கு படுது...''

சிவசாமி திகைத்துப் போய் தன் மனைவி கோகிலத்தைப் பார்த்தார். சுமதி குறுக்கிட்டுச் சொன்னாள்.

''அங்கிள்! இதையெல்லாம் நான் சொன்னேன்னு ராதிகா கிட்டே சொல்லிடாதீங்க... கேள்விப்பட்டதா சொல்லி விசாரிச்சுப் பாருங்க...''

சுமதி போய்விட்டாள்.

சிவசாமி கோகிலத்தின் மேல் எரிந்து விழுந்தார். ''பார்த்தியாடி உம் பொண்ணோட லட்சணத்தை...''



''எனக்கென்னமோ நம்ம ராதிகா அப்படியெல்லாம் இருக்க மாட்டாள்னு எனக்கு தோணுதுங்க... வந்ததும்... விசாரிச்சுப் பார்க்கலாம்...''

''நான் அவகிட்ட ஒரு வார்த்தைகூட பேசமாட்டேன்... நீயே உன் பொண்ணுகிட்டே கேளு...'' சொன்னவர் ஈஸிச்சேரில் போய் சாய்ந்தார்.

இருவரும் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

சுவர் கடிகாரத்தின் விநாடி முள் நொண்டியது.

6.40... 6.45... 6.50...

கோகிலம் வாசலுக்கும் வீட்டுக்குமாய் அலைந்து கொண்டிருந்தாள். மணி ஏழு அடித்த போது ஈஸிச்சேரில் வீம்பாய் உட்கார்ந்திருந்த சிவசாமி எழுந்தார். முகத்திலிருந்த கோபம் காணாமல் போய் கலக்கம் பிறந்திருந்தது.

''என்னடி... இன்னும் இவளைக் காணோம்?''

''மறுபடியும் ஆபீசுக்கு போன் பண்ணிப் பாருங்களேன்...''

''மணி ஏழாச்சு... இன்னுமா ஆபீஸ் திறந்து வெச்சிருப் பாங்க...''

''எதுக்கும் ஒருநடை போய்... போன் பண்ணுங்களேன்...''

சிவசாமி வாசற்படிக்கு வந்து - செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினார். தெருமுனையில் ஒரு ஆட்டோ திரும்பியது.

நின்றார்.

## 4

இரவு பத்து மணி.

போலீஸ் ஸ்டேஷனின் உட்புற அறையொன்றில்... இன்ஸ்பெக்டர் ஜார்ஜ் அந்த மாலை நாளிதழில் வெளியாகியிருந்த செய்தியைப் படித்துக் கொண்டிருந்தார்.

நகரில் அடுத்தடுத்து வழிப்பறி
மோட்டார் சைக்கிளில் வந்து திருடர்கள் அட்டூழியம்

*இதுபற்றி கூறப்படுவதாவது: காந்திநகர் செபாஸ்டியன் தெருவில் குடியிருப்பவர் ராமநாதன். வயது இருபதெட்டு. எல்.ஐ.சி. அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி ருக்மணி. வயது இருபத்தி மூன்று. கடந்த சனிக்கிழமை இரவு எட்டு மணிக்கு இவர்கள் சாயிபாபா காலனி 10வது வீதி வழியாக மெயின் ரோட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தனர். அந்த வீதியில் நான்கு ரோடுகள் சந்திக்கும் இடத்தில் இரவு 11 மணி வரை எப்போதும் பாணி பூரி வியாபாரம் அமோகமாக நடக்கும். எனவே எப்போதும் அந்தப் பகுதியில் கூட்டம் இருக்கும். ஆள் நடமாட்டம் அதிகம் உள்ள அந்தப் பகுதியில் கணவனும் மனைவியும் பேசியபடியே வந்தனர். அப்போது ஆர்எக்ஸ் பைக் ஒன்று வந்தது. மோட்டார் சைக்கிளை ஓட்டியவனுக்கு முப்பது வயது இருக்கும். பின்னால் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு இருபத்திநாலு வயது இருக்கும். மோட்டார் சைக்கிள் மெதுவாய் வந்தது. அப்போது மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்த ஆசாமி ருக்மணியின் கன்னத்தில் ஓங்கி அடித்தான். அடிபட்ட அதிர்ச்சியில் ருக்மணி திரும்பிப் பார்த்தாள். அதற்குள் அவள் கழுத்தில் இருந்த தாலியுடன் கூடிய ஆறு பவுன் தங்கச் செயினை மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்த ஆசாமி இழுத்துப் பறித்தான். உடனே கணவனும் மனைவியும் திருடன் திருடன் பிடியுங்கள் என்று அலறினார்கள். திருடன் செயினை தன் ஆள்காட்டி விரலில் ஸ்டைலாக சுற்றி காண்பித்தான். யாரும் பிடிக்க முயற்சி செய்யாததால் மோட்டார் சைக்கிள் மேற்கு நோக்கி செல்லும் கட்ரோட்டில் மின்னல் வேகத்தில் சென்று மறைந்தது. அடுத்தடுத்து சில நாட்களுக்குள் பல்வேறு வழிப்பறிகளை செய்தவர்கள் ஒரே ஆட்கள்தான் என்று தெரிகிறது. நகரில் தொடர்ந்து அட்டூழியம் செய்துவரும் இந்தத் திருடர்களை இன்னும் பிடிக்க முடியவில்லை. போலீசார் தொடர்ந்து தேடி வருகிறார்கள்.*



படித்துக் கொண்டிருந்த பேப்பரை வீசி எறிந்தார் ஜார்ஜ். பக்கத்து மேஜையில் இருந்த சப்-இன்ஸ்பெக்டர் மணியிடம் எரிந்து விழுந்தார்.

''இந்த பத்திரிக்கை ரிப்போர்ட்டர் யாரு...?''

''சந்திரன் ஸார்...''

''நியூஸை சின்னதாப் போடச் சொன்னா... போலீஸோட மானத்தை ஏலம் போடற மாதிரி... இவ்வளவு சாங்கோ பாங்கமா நியூஸ் போட்டிருக்கான்...''

''அவன் எதிர்கட்சி ஆள் ஸார்...''

''மணி!''

''ஸார்...''

''இன்னும் ஒருவார காலத்திற்குள் அந்த செயின் ஸ்நேட்ச்சர்ஸ் யார்ங்கிறதை கண்டுபிடிச்சாகணும். இல்லேன்னா போட்டிருக்கிற

காக்கி உடுப்பைக் கழட்டி வச்சுடணும்... வெளியே போக முடியலை மானம் போகுது..."

"எப்படியும் கண்டுபிடிச்சிடலாம் ஸார்..."

"நேத்து ஒருத்தனைப் பிடிச்சோமே...? அவன் என்ன சொல்றான்?"

"அவன் இரண்டு மூணு பைக்குகளைத் திருடி பார்ட் பார்ட்டா பிரிச்சு வித்ததை ஒத்துக்கிட்டான். ஸார்... நான் செயின் ஸ்நேச்சர் இல்லைன்னு சத்தியம் பண்றான்..."

"சரவணா நகர்ல ஒருத்தன் இருந்தானே...?"

"தங்கராஜ்..."

"அவனைக் கொஞ்சம் அப்ஸர்வ் பண்ணுங்களேன்..."

"அவன் ஊர்லே போய் செட்டில் ஆயிட்டானாம்..."

"அப்படின்னா... இப்ப புதுசா புறப்பட்டிருக்கிற செயின் ஸ்நேட்ச்சர்ஸ் யார்ன்னு தெரியலையே..." அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மேஜையின் மேலிருந்த டெலிபோன் மணி அடித்தது.

சப்-இன்ஸ்பெக்டர் மணி ரிஸீவரை எடுத்து கேட்டுவிட்டு ஜார்ஜை ஏறிட்டார்.

"ஸார்... சிவசாமின்னு ஒரு பள்ளிக்கூட வாத்தியார் உங்ககிட்டே பேசணுமாம்... நீங்க அவர் ஸ்டூடண்டாம்..."

ஜார்ஜ் மரியாதை கலந்த பயத்தோடு ரிஸீவரை வாங்கி "வணக்கம் ஸார்... நான் ஜார்ஜ் பேசறேன்."

"ஜார்ஜ்... நீ எனக்கு ஒரு உதவி பண்ணணுமே...?"

"சொல்லுங்க ஸார்..."



"நீ ஃப்ரியா இருந்தா என் வீடு வரைக்கும் வந்து போக முடியுமா?"

"இப்பவே புறப்பட்டு வர்றேன் ஸார்..."

## 5

ஜார்ஜ் தன் யமஹா பைக்கை சிவசாமியின் வீட்டின் முன்பு நிறுத்தி ஸ்டாண்ட் போட்டபோது மணி பத்தரை.

சிவசாமியும் கோகிலமும் வாசலிலேயே இருண்டு போன முகங்களோடு காத்திருந்தார்கள். ஜார்ஜ் 'வணக்கம்' சொல்லிக் கொண்டே அவர்களை எதிர்கொண்டார்.

"உள்ளே வா ஜார்ஜ்..."

சிவசாமி உள்ளே போய் - நாற்காலியை காட்டிவிட்டு எதிரில் இருந்த நாற்காலியில் தானும் உட்கார்ந்தார்.

"என்ன ஸார்... என்ன விஷயம்...?"

"ஜார்ஜ்! என்னோட பொண்ணு ராதிகாவைப் பாத்திருக்கே இல்லையா...?"

"ம்... ஒரு தடவை... ரோட்ல உங்களை சந்திச்சு பேசினப்போ, கூட இருந்த உங்க டாட்டரை அறிமுகப்படுத்தினீங்க..."

"அவளைக் கடந்த ஆறுமணி நேரமா காணோம்..."

"எ... என்னது காணோமா...?"

"ஆமா... நாலரை மணிக்கே ஆபீஸை விட்டுக் கிளம்பியிருக்கா... ஆனா வீடு வந்து சேரலை..."

"ராதிகா வேலைக்கு போற ஆபீஸ் எது..."

''ராம்ஜே பைனான்ஸிங் கார்ப்பரேஷன்... இன்னிக்கு அவளைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்திருந்தாங்க... நான் மத்தியானம் மூணு மணிக்கே அவளுடைய ஆபீசுக்கு போய் சொல்லிட்டு வந்தேன். நாலு மணிக்கு பர்மிஷன் போட்டுட்டு வந்துடறேன்னு சொன்னா... ஆனா அஞ்சரை மணி வரைக்கும் வரலை... டெலிபோன் பூத்திலிருந்து போன் பண்ணிப் பார்த்தேன். நாலரை மணிக்கே அவ ஆபீசிலிருந்து புறப்பட்டு போயிட்டதாக சொன்னாங்க... வீட்டுக்கு வந்து காத்திட்டிருந்தேன். ராதிகா வராததினால பெண் பார்க்க வந்தவர்களும் புறப்பட்டுப் போயிட்டாங்க. மறுபடியும் ஏழு மணிக்கு ஒரு தடவை போன் பண்ணிப் பார்த்தேன். வாட்ச்மேன் போன்ல பேசினான். ஆபீஸை ஆறு மணிக்கே பூட்டிட்டு எல்லோரும் போயிட்டாங்கன்னு அவன் சொன்னான். பத்து மணி வரைக்கு அவ எப்படியும் வந்துடுவான்னு தைரியமா இருந்தேன். ஆனா அந்த தைரியம் இப்ப இல்லை. அதான் உனக்கு போன் பண்ணினேன்...''

ஜார்ஜ் புன்னகைத்தார். ''பயப்படாதீங்க சார்! ராதிகா சின்னக் குழந்தையில்லை. எந்த ஃப்ரண்ட்ஸ் வீட்டுக்காவது போயிருக்கலாம். போன இடத்துல லேட்டாகி பஸ் கிடைக்காம...''

''இல்லை ஜார்ஜ்... ராதிகா அப்படியெல்லாம் எந்த ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்கும் போக மாட்டா. அதுவுமில்லாம இன்னிக்கு அவளைப் பெண் பார்க்க வரப்போகிற விஷயம் தெரியும்...''

''இந்தக் கல்யாண ஏற்பாடுகளில் ராதிகாவுக்கு இஷ்டம்தானே?''

''இ... இஷ்டம்தான்... ஆனா...''

''சொல்லுங்க ஸார்...''

''சாயந்திரம் ராதிகாவோட ஃப்ரெண்டு சுமதி வந்திருந்தப்ப அவ சொன்ன ஒரு தகவல் நெருடலாயிருக்கு...''



''என்ன தகவல்...?''

''ராதிகா யாரையாவது விரும்பிட்டிருக்கலாம்னு சொன்னா...''

''அது யார்ன்னு சொல்லலையா...?''

''தெரியாதுன்னு சொல்லிட்டா...''

ஜார்ஜ் சில விநாடிகள் தாடையைத் தடவியபடி யோசித்துக் கொண்டிருந்துவிட்டு நிமிர்ந்தார்.

''ராதிகாவுக்கு ஆபீஸ்ல யார் நெருக்கமான தோழி...?''

''உஷாங்கிற பொண்ணு...''

''அவளை விசாரிச்சுப் பார்த்திங்களா...?''

''அவ வீடு தெரியாதே...''

''ஆபீஸ் வாட்ச்மேன்கிட்டே கேட்டா சொல்லியிருப்பானே...''

''எனக்குத் தோணலை...''

ஜார்ஜ் எழுந்தார். ''கவலைப்படாதீங்க ஸார்... இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே உங்க பொண்ணு இந்த வீட்ல இருப்பா... மனசைக் கலவரப்படுத்திக்காம தைரியமா இருங்க...''

கோகிலம் குறுக்கிட்டாள்.

''தம்பி...''

''என்னம்மா...?''

''இந்த விஷயம் வெளியே...''

''தெரியக் கூடாது... அவ்வளவுதானே? கண்டிப்பாத் தெரியாது...'' சொன்ன ஜார்ஜ் வாசலுக்கு வந்து யமஹாவை கிளப்பினார்.

# 6

ஆபீஸ் வாட்ச்மேன் மூலமாய் - உஷாவின் வீட்டு அட்ரஸைத் தெரிந்து கொண்டு பைக்கை விரட்டினார் ஜார்ஜ்.

நகரின் அவுட்டரில் இருந்த திருவள்ளுவர் நகரைத் தொட்டு-தேர்ட் க்ராஸில் 41 எண்ணிட்ட வீட்டுக்கு முன்பாய் பைக்கை நிறுத்தினார். குரைத்துக் கொண்டு வந்த ஒரு நாயைப் பொருட்படுத்தாமல் - சிறிய காம்பௌண்ட் கேட்டைத் திறந்து இருட்டான வாசற்படிகளில் ஏறி காலிங்பெல் பொத்தானைத் தேடி அழுத்தினார்.

"ப்பிர்ர்ர்ர்..."

உடனே உள்ளே குரல்கள் கேட்டது.

''என்னங்க... உங்களைத்தான்... யாரோ காலிங் பெல் அடிக்கிறாங்க... ஊரிலிருந்து தந்தி வந்தாலும் வந்திருக்கும் போய்ப் பாருங்க..."

தொடர்ந்து ஒரு ஆணின் குரல் சலிப்பாய் கேட்டது.

"இப்பத்தான் கண்ணை மூடினேன்... நீதான் போய் யார்ன்னு பாரேன்... தந்தியா இருந்தா கையெழுத்துப் போட்டு வாங்கு..."

ஜார்ஜ் காத்திருந்தார்.

ஜன்னல் கண்ணாடியில் ட்யூப் லைட் வெளிச்சம் வந்து ஒட்டிக் கொள்ள நடைச் சத்தம் கேட்டது.

தாழ்ப்பாள் விலகியது.

சேலையை இழுத்து போர்த்திக் கொண்டு நின்றிருந்த அந்த அம்மாள் ஜார்ஜைப் பார்த்ததும் நெற்றியைச் சுருக்கினாள்.



போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் நாக்கு சட்டென்று உலர்ந்து போயிற்று.

''யா.... யார்... வேணும்...''

''உஷா...''

''உஷாவா...? எதுக்கு...?''

ஜார்ஜ் புன்னகைத்தார். ''பயப்படாதீங்கம்மா... ஒரு என்கொய்ரிக்காகத்தான் வந்திருக்கேன்... உஷா உங்க டாட்டரா?''

''ஆமா...''

''கூப்பிடுங்க...''

அந்த அம்மாள் அரக்க பரக்க உள்ளே போக - அடுத்த நிமிஷத்தின் ஆரம்பத்தில் அந்த வழுக்கைத் தலை மனிதரும் ஊதாநிற நைட்டியில் ஒரு இளம்பெண்ணும் வந்தார்கள். அவள் சொன்னாள்.

''எஸ்... மை செல்ஃப்... உஷா...''

''மிஸ் உஷா... இந்த ராத்திரி நேரத்துல உங்களைத் தொந்தரவு படுத்தறதுக்காக மன்னிக்கணும்...''

''என்ன விஷயம்... ஸார்...?''

''உங்க ஆபீஸ் கொலிக் ராதிகா இன்னும் வீடு வந்து சேரலை...?''

உஷாவின் முகம் உடனே மாறியது.

''என்னது... இன்னும் வீடு வந்து சேரலையா...? நாலரை மணிக்கே புறப்பட்டுப் போனாளே...''

''ஆர்... யூ... ஸ்யூர்...?''

''ஷ்யூர்... என்கிட்ட சொல்லிட்டுத்தானே போனா...?''

"ஆபீஸை விட்டுப் போகும்போது... ராதிகாகூட வேற யாராவது போனாங்களா?"

"இல்லையே அவ மட்டும்தான்... தனியா போனா..."

"புறப்படறப்போ ஏதாவது போன் கால் வந்ததா?"

"இல்லை..."

"ராதிகாவுக்கு ஆபீஸ்ல வேற யார்கூட பழக்கம் உண்டு?"

"குறிப்பா யாரையும் சொல்ல முடியாது... ஏன்னா ராதிகா ஜோவியல் டைப் எல்லார்கிட்டேயும் சகஜமா பழகுவா..."

"ராதிகாவோட... கல்யாண ஏற்பாடுகளைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா...?"

"தெரியும்..."

"எனி லவ் அஃபேர்...?"

"நோ ஐடியா..."

"ராதிகா ஆபீசிலிருந்து வீடு திரும்பலை. எங்கே போயிருப் பான்னு நினைக்கிறீங்க..."

"தெரியலை..."

"ராதிகாவுக்கு வெளியிலிருந்து போன் கால் வருமா...?"

"ம்... வரும்..."

"யார்கிட்டேயிருந்து..."

"தெரியாது... ஸார்..."

"ஆபீஸ்ல... யார்கிட்டே கேட்டா ராதிகாவைப்பத்தின விவரங்கள் கிடைக்கும்...?"

"ஸாரி... நோ ஐடியா."



"உங்க ஆபீஸ் ஒரு காம்ப்ளக்ஸ் கட்டிடத்துக்குள் ரெண்டாவது மாடியில் இருக்கு. மொத்தம் ஆறு மாடிகள் இருக்கிற அந்த காம்ப்ளக்ஸில் எத்தனை கம்பெனிகள் இயங்கிட்டிருக்கு...?"

"ஏழெட்டு இருக்கும்..."

"அந்தக் கம்பெனி ஸ்டாஃப்ஸில் எந்த ஒரு ஆணாவது பெண்ணாவது ராதிகாவோட பழகியிருக்கிறதைப் பார்த்திருக்கீங் களா...?"

"இல்லை..."

"ப்ளீஸ்... யோசிச்சு சொல்லுங்க... ஏன்னா எந்த ஒரு சின்னத் தகவலும் இந்த நேரத்தில் உதவியா இருக்கும்..."

உஷா யோசித்துவிட்டு தலையாட்டினாள். "எனக்குத் தெரிஞ்ச அளவில் ராதிகா வேற யார்கூடவும் பழகி நான் பார்த்ததில்லை."

ஜார்ஜ் தன் யமஹாவுக்கு ஏமாற்றமாய் திரும்பி - அதை விரட்டிக் கொண்டு சிவசாமியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது - அவரும் - அவருடைய மனைவியும் வாசற்படியிலேயே காத்துக் கிடந்தார்கள்.

"ஜார்ஜ் என்னாச்சு...?"

"ஒரு தகவலும் கிடைக்கலை ஸார்..."

"உஷா என்ன சொன்னா...?"

"ராதிகா நாலரை மணிக்கே ஆபீஸை விட்டு கிளம்பிட்டதா சொல்றா... ஆபீஸை விட்டு வெளியே வந்த ராதிகா எங்கே போயிருப்பான்னு கண்டுபிடிக்க எவ்வளவோ முயற்சி பண்ணினேன்... முடியலை..."

கோகிலம் அழுகையில் வெடித்து - சேலைத் தலைப்பை வாயில் பொத்திக் கொண்டாள். சிவசாமி தொண்டையடைக்கக் கூப்பிட்டார்.

"ஜார்ஜ்..."

"என்ன ஸார்..."

"ராதிகாவை யாராவது கடத்திக்கிட்டு போயிருப்பாங்களோ..."

"நான் அப்படி நினைக்கலை ஸார். ஏன்னா... ராதிகா ஆபீஸை விட்டு வெளியே வந்த நேரம் - ராத்திரி நேரமில்லை. பகல் நேரம்... படிச்ச ஒரு பெண்ணை அந்தப் பகல் நேரத்துல அவ்வளவு சுலபமா கடத்திட முடியாது... நான் என்ன நினைக்கிறேன்னா..."

"சொல்லு ஜார்ஜ்..."

"ராதிகா யாரையாவது காதலிச்சிருக்கணும்... இந்த சமயத்துல நீங்க பண்ற திருமண ஏற்பாடுகள் பிடிக்காம... அந்தப் பையனோடு வெளியூர் எங்கேயாவது போயிருக்கணும்... நீங்க வேணும்ன்னா பாருங்க ஸார்... நாளைக்கு காலையில பத்து மணிக்குள்ளே அவங்க ரெண்டு பேரும் மாலையும் கழுத்துமா உங்க கால்ல வந்து விழப் போறாங்க..."

## 7

மறுநாள் காலை பத்து மணி.

ராம்ஜே பைனான்ஸிங் கார்ப்பரேஷன் மானேஜருக்கு எதிரில் இன்ஸ்பெக்டர் ஜார்ஜும் சிவசாமியும் உட்கார்ந்திருந்தனர். சிவசாமியின் கண்கள் ராத்திரி முழுவதும் விழித்த காரணத்தால் கலங்கிப் போயிருந்தன.

மானேஜர் சொல்லிக் கொண்டிருந்தார். "மிஸ்டர் இன்ஸ்பெக்டர் நான் நேற்றைக்கு மூணேகால் மணி சுமாருக்கு ராதிகாவைப் பார்த்தேன். வீட்ல ஏதோ விசேஷம்னு பர்மிஷன் கேக்குறதுக்காக... என் ரூமுக்கு வந்தா... அப்ப நான் அவசரமா வெளியே கிளம்பிட்டிருந்தேன். போன வருஷ பாலன்ஸ்ஷீட் காப்பி ஒண்ணு



தேவைப்பட்டதால அதை பிரிப்பேர் பண்ணிக் குடுத்துட்டு வீட்டுக்குப் போன்னு ராதிகாகிட்ட சொன்னேன். அவளும் பாலன்ஸ்ஷீட்டை பிரிப்பேர் பண்ணி என் மேஜைமேல வெச்சுட்டுத்தான் நாலரை மணிக்கு கிளம்பிப் போயிருக்கா... பாருங்க அவ தயாரிச்ச பாலன்ஸ்ஷீட்..."

"ராதிகாவுக்கு வெளியே இருந்து போன் வரும்னு டைப்பிஸ்ட் உஷா சொன்னாங்க. அவளுக்கு போன் யார்கிட்டேயிருந்து வரும்?"

"எனக்குத் தெரியாது... ஒருவேளை ஹெட்கிளார்க்குக்கு தெரிஞ்சிருக்கலாம்..."

"ப்ளீஸ் அவரைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா?"

மானேஜர் இண்டர்காமில் வரவழைத்தார். ஜார்ஜ் கேள்வியைக் கேட்டதும் ஹெட்கிளார்க் வாயிலிருந்த வெற்றிலைச் சாற்றை விழுங்கிட்டுச் சொன்னார்.

"ஸார்... ராதிகாவுக்கு வாரத்துல ரெண்டு தடவை மூணு தடவை போன் வரும். ஒரு ஆண் குரல்தான் கேட்கும். ராதிகாவோடு பேசணும்னு சொன்னா உடனே ராதிகாவைக் கூப்பிட்டு ரிஸீவரைக் கொடுத்துடுவேன்..."

"ராதிகா என்ன பேசறான்னு ஹியர் பண்ண மாட்டீங்களா...?"

"மாட்டேன்... பொதுவா ஸ்டாஃபோட பர்சனல் விஷயங்கள்ல நான் அக்கறை காட்றதில்லை. ராதிகா நல்ல பொண்ணு கேரக்டர்ல எந்தக் குற்றமும் சொல்ல முடியாது."

ஹெட் கிளார்க் சொல்லிக் கொண்டிருக்கும் போதே -

ப்யூன் பொன்னுசாமி - வேர்த்து விறுவிறுத்தபடி அறைக் கதவைப் படீரென்று திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

"ஸ...ஸார்!"

மூன்று பேரும் திரும்பினார்கள்.

பொன்னுசாமியின் குரல் திக்கச் சொன்னான். ''ஸ... ஸார்.... ரி... ரிக்கார்ட்... ரு...ரூம்ல... ராதிகா அம்மாவும் யாரோ ஒரு ஆளும் செத்துக் கிடக்கறாங்க...''

## 8

ஆபீஸ் மொத்தமும் தீப்பிடித்த உணர்ச்சிக்குள் விழுந்தது எல்லோரும் - சற்று ஒதுங்கியிருந்த அந்த ரிக்கார்ட் ரூமை நோக்கி ஓடினார்கள்.

இன்ஸ்பெக்டர் ஜார்ஜ் ரிக்கார்ட் ரூமை நெருங்கி எட்டிப் பார்த்தார். எதுவும் தட்டுப்படவில்லை. பக்கத்திலிருந்த ப்யூன் மூச்சிறைத்தபடி சொன்னான்.

''அந்த ரேக்குக்கு பின்னாடி கிடக்கிறாங்க சார்...''

ஜார்ஜ் யாரையும் உள்ளே வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு தான் மட்டும் அந்த அறைக்குள் நுழைந்தார். பழைய ஃபைல்களின் மக்கிப் போன வாசனை அடித்தது. நான்கைந்து கரப்பான் பூச்சிகள் சுதந்திரமான நடமாட்டத்தில் இருந்தன.

ஜார்ஜ் ரேக்கை நெருங்கி - அதன் மறுபக்கம் எட்டிப் பார்த்தார். மனசுக்குள் ஒரு உத்தரகாசி பூகம்பம் நிகழ்ந்தது.

தலையில் உறைந்து வழிந்த ரத்தக் கோடுகளோடு - ராதிகாவும் அந்த இளைஞனும் கிடந்தார்கள். ராதிகாவின் பிணம் அந்த இளைஞனின் உடல் மேல் விழுந்திருந்தது. கூடவே வந்து ஜார்ஜ்க்கு பின்னாலிருந்து எட்டிப்பார்த்தார் சிவசாமி - அழுகையில் வெடித்துக் குலுங்கினார்.



''ஜார்ஜ்...! எம் பொண்ணு... எம் பொண்ணு கிடக்கிற கோலத்தைப் பாத்தியா...?''

''ஸ...ஸார்! நாம எதிர்பார்க்காத... நடக்கக் கூடாத சம்பவம் நடந்திருக்கு.. ராதிகாவோடு இறந்து கிடக்கிற ஆள் யாருன்னு தெரியுதா...?''

சிவசாமி மேல் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு விம்மியபடியே அலமாரியின் பின்பக்கம் எட்டிப் பார்த்தார்.

ராதிகாவின் உடம்புக்குக் கீழே ஒருக்களித்து விழுந்திருந்த அந்த இளைஞனை உற்றுப் பார்த்தார் சிவசாமி. அழகாய், சிவப்பாய், தலை கொள்ளாத சுருட்டை முடியோடு இருந்த அந்த இளைஞனை இதற்கு முன்னால் எங்கேயும் பார்த்த மாதிரி சிவசாமிக்கு நினைவில்லை.

ஜார்ஜிடம் திரும்பித் தலையாட்டினார்.

''தெரியலை...''

ஜார்ஜ் பக்கத்தில் நின்றிருந்த மானேஜரிடம் சொன்னார். ''ஆள் உங்களுக்குத் தெரிஞ்சவரான்னு பார்த்துச் சொல்லுங்க...''

மானேஜரும் பார்த்துவிட்டு தலையாட்டினார்.

''யாருன்னு தெரியலை...?''

''உங்க ஆபீஸ் ஸ்டாஃப்பை ஒவ்வொருத்தரா வந்து பார்க்கச் சொல்லுங்க.. அவங்கள்ல யாருக்காவது தெரிஞ்சிருக்கலாம்...''

ஒவ்வொருத்தரும் தயங்கியவாறே வந்து எட்டிப் பார்த்துவிட்டு - தெரியாது என்கிற பாவனையில் தலையசைத்து நகர்ந்தார்கள்.

ஜார்ஜ் பொதுப்படையாகக் கேட்டார் ''நேத்து சாயந்தரம் ரிக்கார்ட் ரூமை லாக் பண்ணினது யாரு...?''

''நான்தான் ஸார்...''

ப்யூன் பொன்னுசாமி குரல் கொடுத்தான்.

''எத்தனை மணிக்கு லாக் பண்ணினே...?''

''ஆறு மணி இருக்கும் ஸார்...''

''லாக் பண்றதுக்கு முந்தி - ரூமுக்குள்ளே யாராவது இருக்காங்களான்னு பார்த்தியா...?''

''உள்ளே போய் பார்க்கலை ஸார்... சும்மா எட்டிப் பார்த்துட்டு ரூமை லாக் பண்ணிட்டுவந்துட்டேன்... மூணே கால் மணி சுமாருக்கு ராதிகாம்மா ரிக்கார்ட் ரூமுக்குள்ளே போறதைப் பார்த்தேன்... ஏதோ ஃபைலை எடுத்துக்கிட்டு வெளியே வந்தாங்க...''

இப்போது டைப்பிஸ்ட் உஷா குறுக்கிட்டு சொன்னாள். ''ஸார்... எனக்கு இப்பத்தான் ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருது... நாலரை மணிக்கு ராதிகா புறப்படும் போது ஒரு ஃபைலை கையில வெச்சுக்கிட்டு இதை வேற ரிக்கார்ட் ரூம்ல கொண்டு போய் வைக்கணும்'ன்னு முனகினா... அந்த ஃபைலை ரிக்கார்ட் ரூம்ல கொண்டு போய் வைக்கும்போதுதான் அவளுக்கு ஏதாவது ஆகியிருக்கணும்... வீட்டுக்கு புறப்படுகிற சமயத்தில் ராதிகா ரிக்கார்ட் ரூமுக்குள்ளே போனதாலே... அவவீட்டுக்குப் போயிட்டதாகவே நான் நினைச்சுட்டேன்... மத்த ஆபீஸ் ஸ்டாஃபும் அப்படியே நினைச்சிருக்காங்க...''

ஜார்ஜ் வெளியே வந்தபடி சொன்னார். ''ஃபாரன்ஸிக் பீப்பிள் வர்ற வரைக்கும் இந்த ரூமை டிஸ்டர்ப் பண்ணாதீங்க... ப்ளீஸ் பி அவே ஃப்ரம் த ரூம்.''

எல்லோரும் வெளியே வந்து பரவ - ஜார்ஜ் ஹெட் கிளார்க் டேபிளின் மேலிருந்த டெலிபோனை நோக்கிப் போனார்.

அவர் ரிஸீவரைத் தொடுவதற்கு முன் டெலிபோன் மணி அடித்தது. இரண்டு தடவை அடிக்கவிட்டு ரிஸீவரை எடுத்தார்.



''ஹலோ...''

ஒரு ஆண் குரல் கேட்டது.

''அது ராம்ஜே பைனான்ஸிங் கார்ப்பரேஷன்?''

''எஸ்...''

''குட் ஐ... ஸ்பீக் வித் மிஸ் ராதிகா...?''

ஜார்ஜ் நிமிர்ந்தார்.

''நீங்க... யாரு...?''

''ராதிகாவுக்கு ரிலேஷன்...''

''ஒன் மினிட் அவங்க டாய்லெட்ல இருக்காங்க... லைன்ல வெயிட் பண்றீங்களா...?''

''வெயிட் பண்றேன்...''

ஜார்ஜ் ரிஸீவரை மேஜையின் மேல் ஒருக்களித்து வைத்து விட்டு மானேஜரிடம் வந்தார். ''இங்க டெலிபோன் மொத்தம் எத்தனை லைன்...?''

''அஞ்சு...''

''ராதிகாவோட பேசணும்னு சொல்லி - எவனோ ஒருத்தன் போன் பண்ணியிருக்கான். கேட்டா ரிலேஷன் ஆகணும்னு சொல்றான். ஆள் எங்கிருந்து பேசறான்னு எக்சேஞ்சுக்கு போன் பண்ணிக் கண்டுபிடிச்சாகணும்... நீங்க எக்சேஞ்சைக் கான்டாக்ட் பண்ணி விஷயத்தை சொல்லி எந்த நெம்பர்லேந்து பேசறாங்கங்கிறதை ட்ரேஸ் பண்ணுங்க ப்ளீஸ்...''

மானேஜர் தன்னுடைய அறையை நோக்கி வேக வேகமாய்ப் போனார்.

இரண்டு நிமிஷங்களில் திரும்பி வந்தார்.

"இன்ஸ்பெக்டர் காட் இட்..."

"எந்த நெம்பர்...?"

"ட்டு டபுள் ஃபோர் டபுள் ஃபைவ்"

"அட்ரஸ்?"

"சாமராட் ரோட்வேஸ்... க்ரீன் வ்யூ ரோடு நெம்பர் லெவன்.

## 9

ஜார்ஜ் ஃபாரன்ஸிக் துரைக்கும் - டி.எஸ்.பி.க்கும் தகவலை சொல்லிவிட்டு தன் யமஹாவில் புறப்பட்டார்.

க்ரீன் வ்யூ ரோட்டில் சாம்ராட் ரோட்வேஸ் போர்டு பார்வைக்குக் கிடைத்ததும் - யமஹாவின் இயக்கத்தை அங்கே நிறுத்தினார். கூட்ஸ், புக்கிங் செக்ஷனில் இருந்த அந்த இரண்டு இளைஞர்களும் ஜார்ஜின் வருகையில் கலைந்து நிமிர்ந்தார்கள்.

உள்ளே நுழைந்த ஜார்ஜ் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தபடி கேட்டார்.

"இங்கே மொத்தம் எத்தனை ஸ்டாஃப்ஸ்..?"

"மானேஜரை சேர்த்து மூணு பேர்தான் ஸார். அவர் இப்போ வெளியே போயிருக்கார்..."

"சரி கொஞ்ச நேரத்துக்கு முந்தி... அதாவது பத்து நிமிஷத்துக்கு முந்தி - இங்கிருந்து ராம்ஜே பைனான்சிங் கார்ப்பரேஷனுக்கு போன் பண்ணியது யாரு...?"

இரண்டு பேரில் சிவப்பாய் - களையாய் இருந்த அந்த இளைஞன் திடுக்கிட்டவனாய் நிமிர்ந்தான்.



"நா... நான்தான் ஸார்... பண்ணினேன்."

"யாருக்கு போன் பண்ணினே...?"

"எ... எதுக்காக ஸார் கேக்கறீங்க...?"

"மொதல்ல கேட்டதுக்கு பதில்..."

"அங்கே ராதிகான்னு... எனக்குத் தெரிஞ்ச பொண்ணு வேலை பார்த்துட்டிருக்கா..."

"உனக்குத் தெரிஞ்ச பொண்ணுன்னா... என்ன அர்த்தம்...?"

"அது... வந்து... வந்து... நானும் ராதிகாவும் ஒருத்தரையொருத்தர் விரும்பிட்டிருக்கோம் ஸார்..."

"உம் பேரென்ன...?"

"அகமது..."

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி ராதிகாவுக்கு எதுக்காக போன் பண்ணினேன்னு சொல்ல முடியுமா...?"

"அது வந்து... நேத்து அவளைப் பெண் பார்க்கிறதுக்காக... யாரோ வரப் போறதா சொன்னா... அதைப்பத்தி தெரிஞ்சுக்கிறதுக் காகத்தான் போன் பண்ணினேன். ராதிகா டாய்லெட்ல இருக்கிறதா சொன்னாங்க... கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப் பார்த்துட்டு ரிஸீவரை வெச்சுட்டேன்..."

"ராதிகாவைக் கடைசியா என்னைக்குப் பார்த்தேன்...?"

"ஸ... ஸார்... எதுக்காக இதையெல்லாம் கேக்கறீங்க...?"

"சொல்றேன்... மொதல்ல கேள்விக்குப் பதில்..."

"நேத்திக்கு முந்தின நாள் பஸ் ஸ்டாப்ல பார்த்தேன்..."

"நேத்துப் பூராவும் பார்க்கலை...?"

''பார்க்கலை ஸார்...''

''சரி... என் கூட வா...''

''எங்கே ஸார்...?''

''வா... சொல்றேன்...''

அஹ்மத் இன்ஸ்பெக்டர் ஜார்ஜை கலக்கமாய் தொடர்ந்தான்.

## 10

டி.எஸ்.பி. பூவராகவன், அஸிஸ்டெண்ட் கமிஷனர் ரகுபதி இருவரும் கலெக்டருக்கு முன்பாய் நின்றிருந்தார்கள். கலெக்டர் ஆங்கிலத்தில் பொரிந்து கொண்டிருந்தார்.

''ஆறு மாதத்திற்கு முன்னாடி வரை தமிழ்நாட்டிலேயே நம்ம மாவட்டம்தான் அமைதியாய் இருந்தது. க்ரைம் அக்கரன்ஸ் பர்சன்டேஜ் கம்மியா இருந்தது. ஆனா இன்னைக்கு நிலைமை அப்படியில்லை. தினசரி வழிப்பறி, வாரத்துக்கு ஒரு கொலை... பெண்கள் ரோட்ல தனியா நடக்கப் பயப்படறாங்க... போலீஸ் டிபார்ட்மெண்ட் என்ன செய்யுதுன்னு கேட்டு ஆயிரக்கணக்கில் எனக்கு மனுக்கள் வருது... நடந்துகிட்டு இருந்த சம்பவங்களுக் கெல்லாம் சிகரம் வெச்ச மாதிரி... ராம்ஜே பைனான்சிங் கார்ப்பரேஷனில் வேலை பார்த்துக்கிட்டிருந்த ராதிகாங்கிற பெண்ணையும் - ஒரு ஆணையும் அந்த ஆபீஸ் ரெக்கார்ட் ரூமுக்குள்ளேயே குரூரமா அடிச்சிக் கொன்னிருக்காங்க. இந்த ரெட்டைக் கொலைச் செய்தியைக் கேட்டு ஜனங்க எவ்வளவு தூரம் கொதிப்படைஞ்சிருக்காங்க தெரியுமா...?''



அஸிஸ்டெண்ட் கமிஷனர் குறுக்கிட்டார். ''ஸார்! சிட்டியில் நடந்துட்டு வர்ற க்ரைம்ஸ், டிபார்ட்மெண்டுக்கு ஒரு சவாலா இருக்கு. போன மாசம் எல்.ஐ.சி. ஸ்டாஃப் க்வார்ட்டர்ஸில் பட்டப் பகலிலேயே வீடு புகுந்து ஒரு பெண்ணைக் கொலைபண்ணிட்டு வீட்டிலிருந்த நகைகளைக் கொள்ளையடிச்சுட்டு போன சம்பவத்துல ஒருத்தனைப் பிடிச்சோம். அவன்கிட்டேயிருந்து உண்மையை வரவழைக்கறதுக்குள்ளே ஆள் தூக்குப் போட்டுக்கிட்டு செத்துட்டான். அதுக்கப்புறம் நடந்த சம்பவங்களில் யாருமே பிடிபடலை... போலீஸ் டிபார்ட்மெண்ட்டைப் பொறுத்த வரைக்கும் அதிதீவிரமா செயல்பட்டுக்கிட்டு இருக்காங்க ஸார்...''

''தீவிரமா செயல்படற லட்சணம்தான் தெரியுதே... மிஸ்டர் ஏ.ஸி. ஸார்...? ராதிகாவோட மரணத்துல இதுவரைக்கும் என்ன உண்மையைக் கண்டுபிடிச்சீங்க...? ராதிகாவோட செத்துப்போன அந்த இளைஞன் யாருங்கிறதைக் கண்டுபிடிச்சீங்களா...?''

''நாட் யெட் ஸார்...''

''மர்டர் எப்படி நடந்திருக்கும்ங்கிறத அனுமானம் பண்ணீங்களா...?''

''ஓரளவுக்கு ஸார்...''

''உங்க அனுமானம் என்ன சொல்லுங்க பார்க்கலாம்...''

''பைனான்சிங் கார்ப்பரேஷன் ரிக்கார்ட் ரூம் ஆபீஸை விட்டு கொஞ்சம் ஒதுக்குப்புறமா இருக்கு. கிட்டத்தட்ட ஃபிப்டி யார்ட்ஸ்... சம்வாட் ரிமோட் ப்ளேஸ். கொலையுண்ட இளைஞன் ராதிகாவுக் குத் தெரிஞ்சவனா இருக்கணும். ராதிகா ரிக்கார்ட் ரூமுக்குப் போறதைப் பார்த்துட்டு அவனும் உள்ளே போயிருக்கலாம்... அந்த சமயத்துல யாரோ உள்ளே பூந்து ரெண்டு பேரையும் கனமான ஆயுதத்தாலே தலையோட பின் பக்கம் தாக்கியிருக்காங்க. அடிப்பட்டதுமே ரெண்டு பேருமே ஸ்பாட் டெட். ராதிகாவோட

கழுத்திலிருந்த - கையிலிருந்த நகைகளைக் கழட்டிக்கிட்டு ரெண்டு பாடியையும் அலமாரிக்குப் பின்னால் இழுத்துப் போட்டுட்டு கொலையாளி கிளம்பியிருக்கணும்..."

"ஸ்பாட்ல ஆயுதம் ஏதும் கிடைக்கலையா...?"

"கிடைக்கலை ஸார்..."

"ராதிகாவோட காதலன் அஹ்மத் என்ன ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கான்...?"

"ராதிகாவோட டெட்பாடியைப் பார்த்ததிலிருந்து அவன் அப்செட் ஆயிட்டான் ஸார்... செத்துக்கிடந்த அந்த இளைஞன் யாருங்கிற விவரமும் அவனுக்குத் தெரியலை..."

"சம்திங் ஸ்ட்ரேன்ஜ்..."

டிஎஸ்பி பூவராகவன் கலெக்டரை ஏறிட்டார். "ஸார்! என்னோட ஹம்பிள் ஒபீனியனை சொல்லலாமா...?"

"ப்ளீஸ்..."

"இந்த வழிப்பறிகளையும் கொலைகளையும் பண்றது தமிழ்நாட்ல இருக்கிற பழைய கிரிமினல்களோ... புதிய க்ரிமினல்களோ கிடையாது ஸார்...?"

"தென்...?"

"வெளி மாநில ஆசாமிகளாகத்தான் இருக்கணும்..."

"எப்படிச் சொல்றீங்க...?"

"தமிழ்நாட்டு க்ரிமினல்ஸுக்கு இவ்வளவு துணிச்சல் இருக்க வாய்ப்பே இல்லை ஸார்... வழிப்பறிகள் செய்யற விதம் புதுசா இருக்கு... பைக்ல ஏர் பெட்ரோலைப் போட்டுக்கிட்டு - கண்மூடிக் கண் திறக்கறதுக்குள்ளே... எந்த ஒரு பெண் கிட்டேயிருந்தும் செயினைப் பறிச்சுடறாங்க... எப்பேர்ப்பட்ட ஆபீஸ் கட்டிடத்திலேயும் பூந்து... கொலைகளைப் பண்ணிடறாங்க..."



"ராதிகா கேஸ்ல எனக்கொரு சந்தேகம்... அவ கொலையானதுக்குக் காரணம் அவகிட்ட இருக்கற நகையைப் பறிக்கிறதுக்கு மட்டுமில்லை... அதுக்குப் பின்னாடி வேற ஏதோ காரணம் இருக்கணும்... ஏன்னா அவகூட ஒரு இளைஞனும் உயிரை விட்டிருக்கான்..."

"அந்த இளைஞன் யார்ங்றதைக் கண்டுபிடிச்சா... கொலைகளுக்கான காரணம் கிடைக்கலாம் ஸார்..."

"அவன் யார்ங்கறதை உடனடியா கண்டுபிடிக்க வேண்டிய ஸ்டெப்ஸ் எடுங்க. சிட்டியில மேற்கொண்டு வழிப்பறிகள் நடக்காம பார்த்துக்க வேண்டியது முக்கியம். இந்த எலெக்ஷன் டைம்ல குற்றவாளிகளை நாம கண்டுபிடிக்கலைன்னா... பொதுமக்களோட கோபத்துக்கு பதில் சொல்ல முடியாது..."

"குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டிய ஸ்டெப்ஸ் எடுத்திருக்கோம் ஸார். எப்படியும் ரெண்டு நாள்ல மடக்கிடுவோம்..."

"டூ... இட்...வாட் யூ செட்..."

"எஸ்... ஸார்..."

சல்யூட்களை அடித்துவிட்டு - டி.எஸ்.பி.யும் அஸிஸ்டெண்ட் கமிஷனரும் வெளியே வந்தார்கள்.

விஸிட்டர்ஸ் ஹாலில் பத்து பதினைந்து பேரோடு உட்கார்ந்திருந்த முன்னாள் எம்.எல்.ஏ. ரவீந்திரன் அவர்களை எதிர்கொண்டார். "என்ன ஏ.ஸி. ஸார்... நான் எம்.எல்.ஏ.வா இருந்தப்ப... பார்க்கும் போதெல்லாம் 'பட் பட்'ன்னு சல்யூட் போட்டீங்க... நான் இப்ப பதவியில் இல்லேன்னதும் கண்டுக்காம போறீங்களே?"

அஸிஸ்டெண்ட் கமிஷனர் சிரித்தார்.

''ஸாரி... நான் உங்களை கவனிக்கலை. எங்கே இவ்வளவு தூரம்... கலெக்டரைப் பார்க்க வந்தீங்களா...?''

''ஆமா...''

''என்ன விஷயமா...?''

''நாளைக்கு எங்க கட்சி சார்பில் போராட்டம் ஊர்வலம் நடக்கப் போகுது...''

''எதுக்கு...?''

''ஊர்ல வழிப்பறி, திருட்டு, ஆபீஸுக்குள்ளே, வீட்டுக்குள்ளே பூந்து பெண்களைக் கொலைபண்ற அக்கிரமம் நடக்குது. இதைப் போலீசும் கண்டுக்கலை ஆளும் கட்சியும் கண்டுக்கலை... எங்க எதிர்ப்பை தெரிவிக்கறதுக்காக இந்தப் போராட்டம் ஊர்வலம்...''

ஏ.ஸி. சொன்னார். ''குற்றவாளிகளை இன்னும் ரெண்டு நாள்ல பிடிச்சுடுவோம்... அதைப்பத்திதான் கலெக்டர்கிட்டே பேச வந்தோம்...''

''வெறும் பேச்சால மட்டும் முடிகிற காரியமில்லை... ஸாரி தீவிரமான ஸ்டெப்ஸ் எடுக்கணும்... கடந்த ஆறு மாதத்தில் எவ்வளவு வழிப்பறிகள் நடந்திருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா...? உங்களுக்கு கணக்கு தெரியாது. நான் சொல்றேன். இந்த ஆறு மாத காலத்தில் எண்பத்தி ஆறு வழிப்பறிகள், ஏழு கொலைகள், கொலையானவர்களில் ஆறுபேர் பெண்கள்...''

''தெரியும்... தெரியும்...''

''போலீஸ்ங்கிறது... எப்.ஐ.ஆர். புக் பண்றதுக்கு மட்டுமில்லை ஏ.ஸி. ஸார்! குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும்தான். நாளைக்கு எங்க கட்சி நடத்தப் போகிற போராட்டம் உங்க டிபார்ட்மெண்ட்டை உசுப்பப் போகிறது... போராட்டம் ஊர்வலத்துக்கு தடை விதிக்கக்



கூடாதுன்னு சொல்லக் கலெக்டர்கிட்டே வந்திருக்கோம்...'' சொன்ன முன்னாள் எம்.எல்.ஏ. ரவீந்திரன் தன்னுடைய ஆதரவாளர்களோடு - கலெக்டரின் அறைக்குள் நுழைந்தார்...

## 11

போலீஸ் ஸ்டேஷன்:

இன்ஸ்பெக்டர் ஜார்ஜ் 'க்ரைம் அக்ரன்ஸ்' சார்ட்டைப் புரட்டிக் கொண்டிருந்த போது கான்ஸ்டபிள் உள்ளே நுழைந்தார்.

''ஸார்...''

நிமிர்ந்தார்.

கான்ஸ்டபிள் முதுகுக்குப் பின்னால் ஒரு பெண் தெரிந்தாள். இளம்பெண் அழகாயிருந்தாள். தலைமுடி கலைந்திருந்தது. மேலுதட்டில் வியர்வை பொடித்திருந்தது. கையில் சின்னதாய் லெதர் பேக்.

கான்ஸ்டபிள் சொன்னார். ''ஸார் இந்தப் பொண்ணு உங்களைப் பார்த்துப் பேசணுமாம்...''

ஜார்ஜ் பார்த்து கொண்டிருந்த ஃபைலை மூடினார். தனக்கு எதிரில் இருந்த பெஞ்சைக் காட்டினார். ''வாம்மா... இப்படி வந்து உட்கார்...''

அவள் தயக்கமாய் வந்து உட்கார்ந்தாள்.

''என்ன விஷயம்...?''

''ஸார்... என் பேர் கீதா... சொந்த ஊர் திருவனந்தபுரம்'' சொன்னவள் தன் கையில் சுருட்டி வைத்திருந்த தமிழ் நாளிதழைப்

பிரித்து ராதிகாவின் கொலையைப் பற்றி பிரசுரித்திருந்த பகுதியில் வெளியாகியிருந்த இளைஞனின் போட்டோவைக் காட்டினாள்.

''கொலையான இந்த நபர் யார்ன்னு தெரியாமே... போலீஸ் டிபார்ட்மெண்ட் திணறிட்டிருக்கிறதா பேப்பர்ல படிச்சேன்... அதைப்பத்தி உங்ககிட்டே சில விவரங்களைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்...''

ஜார்ஜ் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''சொல்லு...''

''இந்த இளைஞனோட பேரு நாராயணன். திருவனந்தபுரத்தில் நான் குடியிருக்கிற வீட்டுக்கு எதிர்வீட்ல இந்த நாராயணன் குடியிருந்தார். அந்தத் தெருவிலேயே நானும் நாராயணும்தான் தமிழ் பேசத் தெரிஞ்சவங்க... நாராயணனுக்கு நேந்திர வறுவல் வியாபாரம்... பஜார்ல சின்னதா கடை போட்டு வியாபாரம் பண்ணிட்டிருந்தார். நானும் அவரும் அதிகமா பேசிக்க மாட்டோம். எதிர்ப்பட்டா நின்னு ரெண்டு நிமிஷம் பேசறதோடு சரி. நாலைஞ்சு நாளைக்கு முன்னாடி நாராயணன் என் வீட்டுக்கு வந்தார். ஒரு விஷயத்தைப் பத்தி உன்கிட்டே கன்சல்ட் பண்ணிட்டு போகலாம்னு வந்தேன்னு சொன்னார். என்ன விஷயம்னு நானும் கேட்டேன். எனக்கு இந்த திருவனந்தபுரத்தைப் பிடிக்கலை. இப்ப பண்ணிட்டிருக்கிற வியாபாரமும் பிடிக்கலை. கோயமுத்தூருக்குப் போய் அங்கே ஒரு பெட்டிக்கடை வெக்கலாம்னு நினைக்கிறேன். கையில் பணம் அம்பதாயிரம் இருக்கு. இதுல பாதிப் பணத்தை நல்லா வட்டி தர்ற ஒரு கம்பெனியில் டிபாசிட் பண்ணிட்டு - மீதிப் பணத்துக்கு பெட்டிக்கடை வெக்கலாம்னு இருக்கேன். பணத்தை எந்தக் கம்பெனியில் டெபாசிட் பண்ணினா நல்ல வட்டி கிடைக்கும்னு கேட்டார்.

''சரி...''



''கோயமுத்தூரில் இருக்கிற ராம்ஜே பைனான்ஸிங் கார்ப்பரேஷன் கம்பெனி இருபது பர்சன்ட் வட்டி தர்றாங்க. நீ அங்கே டிபாசிட் பண்ணலாம்ன்னு சொன்னேன்...''

ஜார்ஜ் தலையாட்ட... கீதா தொடர்ந்தாள்.

''அன்னிக்கு என்கிட்டே பேசிட்டு போன நாராயணனை நேத்தைக்கு பேப்பர்ல இந்தக் கோலத்துல பார்த்ததும்... என்னால அதிர்ச்சியைத் தாங்கிக்க முடியலை... அதான் தொடர்பு... எதுக்காக அவங்க கொலை செய்யப்பட்டாங்கங்கிற விபரமெல்லாம் எனக்குத் தெரியாது. கேரள போலீஸ்ல இந்த விஷயத்தைச் சொல்லலாம்.... ஆனா நான் இங்கே வந்து விஷயத்தைச் சொல்றதுக்குக் காரணம் என்னோட பேர் பேப்பர்ல வரக்கூடாதுங்கறதுக்காகத்தான்...''

''உன் பேர் என்ன சொன்னே...?''

''கீதா...''

''படிக்கிறியா... வேலைக்குப் போறியா...?''

''வேலைக்குப் போயிட்டிருக்கேன். ஒரு டூரிஸம் கம்பெனியில உத்தியோகம். எனக்கு அம்மா அப்பா இல்லை. பெரியம்மா மட்டும்தான்...''

''உன் வீட்டுக்கு எதிர்வீட்லதான் நாராயணன் குடியிருந்தான் இல்லையா...?''

''ஆமா...''

''அவனுக்குப் ஃபேமிலி...?''

''ஃபேமிலி கிடையாது. ஒண்டிக்கட்டை... காலம் பூராவும் பிரம்மச்சாரியாவே வாழப் போறேன்னு நாராயணன் என்கிட்டே அடிக்கடி சொல்லுவார்...''

"கொலைக்கான காரணம் இப்ப ஓரளவுக்குப் புரியுது... ராம்ஜே பைனான்ஸிங் கார்ப்பரேஷனில் பணத்தை டெபாசிட் பண்றதுக்காக வந்த நாராயணனை யாரோ சில பேர் ஃபாலோ பண்ணி வந்து - கொலை பண்ணியிருக்கணும்..."

"அப்படீன்னா ராதிகா...?"

"ராதிகா ரிக்கார்ட் ரூமில இருக்கும் போது நாராயணன் தன்னை ஃபாலோபண்ணிட்டு வந்தவங்ககிட்டேயிருந்து தப்பிக்கிறதுக்காக ரிக்கார்ட் ரூம்ல நுழைஞ்சிருக்கணும். அந்த ஆட்களும் உள்ளே நுழைஞ்சி... நாராயணனையும் ராதிகாவையும் தாக்கி அவன்கிட்ட இருந்த பணத்தையும் அவகிட்டயிருந்த நகைகளையும் பறிச்சுட்டு போயிருக்கணும். ரெண்டு டெட்பாடிகளையும்... அலமாரிக்குப் பின்னால் போட்டுட்டு அவங்க நழுவியிருக்கணும்... ரெண்டு டெட்பாடியும் அலமாரிக்குப் பின்னால் இருந்ததால... ரிக்கார்ட் ரூமை லாக் பண்ண வந்த ப்யூனுக்குத் தெரியலை ரூமைப் பூட்டிட்டான்..."

கீதா சொன்னாள். "ஸார்! நீங்க இந்த கேஸைப் பத்தி எப்படி வேணும்னாலும் அனுமானம் பண்ணிக்கலாம். பட் எனக்குத் தெரிஞ்ச உண்மைகளை நான் சொல்லிட்டேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் என்னோட பேர் பத்திரிகையில் வந்துவிடக்கூடாது... ஏன்னா என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவருக்கு இந்த பப்ளிசிடியெல்லாம் பிடிக்காது."

ஜார்ஜ் புன்னகைத்தார்.

"உன்னைப் பத்தின எந்த ந்யூஸும் பேப்பர்ல வராம பார்த்துக்கிறேன் போதுமா..."

"அது போதும் ஸார்..."



"எனக்கு நாராயணனைப் பத்தின தகவல்கள் இன்னும் வேணும். நீ சொல்ற தகவல்களை வெச்சுத்தான் கொலையாளிகள் யாராயிருக்குங்கிறதை நான் முடிவு பண்ணணும்."

"கேளுங்க ஸார்..."

"நாராயணனோட ஃபரெண்ட்ஸ் யார் யாருன்னு தெரியுமா...?"

"தெரியாது..."

"யோசிச்சு சொல்லும்மா... நாராயணனோட வீட்டுக்கு எதிர்த் தாப்ல இருந்திருக்கே. அவனைத்தேடி வந்தவங்களை கவனிக்காமலா இருந்திருப்பே...?"

"ஸாரி ஸார்...நான் கவனிக்கறதில்லை..."

"நாராயணன் திருவனந்தபுரத்தில் நேந்திர வறுவல் வியாபாரம் பண்ணிட்டிருந்தவன் இல்லையா...?"

"ஆமா ஸார்..."

"கடையை எங்கே வெச்சிருந்தான்..."

"மெயின் பஜார்ல ஒரு ஹோட்டலுக்கு முன்னாடி வெச்சிருந்தான். அதைக் கடைன்னு சொல்ல முடியாது ஸார். ஒரு வண்டியைக் கடை மாதிரி செட்டப்பண்ணி ஹோட்டல்காரங்களோட சம்மதத்தோட... முன்னாடி வெச்சு வியாபாரம் பண்ணிட்டிருந்தான்..."

"அந்த வியாபாரத்தை விட்டுட்டு ஏன் கோயமுத்தூருக்கு வர ஆசைப்பட்டான்...?"

"தெரியலை ஸார்..."

"நீ கேக்கலையா...?"

"கேட்டேன்..."

''என்ன சொன்னான்...?''

''ஊரும் பிசினஸும் பிடிக்கலைன்னு மாத்திரம் சொன்னான்.''

''திருவனந்தபுரத்தில் இருந்த வீட்டைக் காலி பண்ணிட்டானா...?''

''இன்னும் இல்லை...''

''அந்த அட்ரஸைக் குடுத்துட்டுப் போம்மா... நான் இன்னைக்கே புறப்பட்டு அங்கே வர்றேன்...''

''ஸார்... என்னோட... பேர்...?''

''வெளியே வரவே வராது... எனக்கு ஏதாவது தகவல் தேவைப்பட்டா மாத்திரம் உன்கிட்டே வருவேன்... அதுவும் மஃப்டியில் போதுமா...?''

கீதா எழுந்தாள். கைகூப்பினாள்.

## 12

''நகரமா... இல்லை... நரகமா?''

''வழிப்பறித் திருடர்களை வளர்த்துவிடும் போலீஸே!''

''ஒழிக!''

''தாலியைப் பறிக்கும் பாதகர்களை...''

''கைது செய்''

ஆர்ப்பாட்டமான கோஷங்களோடு போய்க் கொண்டிருந்தது அந்த ஊர்வலம். ஊர்வலத்துக்குப் பழைய எம்.எல்.ஏ. ரவீந்திரன் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். ஊர்வலம் கோபமாய் - ஆக்ரோஷமாய் இருந்தது. முஷ்டிகளை உயர்த்தி தொண்டை கிழிய



சத்தம் போட்டார்கள். ஊர்வலம் கலெக்டர் ஆபீசுக்கு முன்பாய் போய் முடிவடைந்ததும் - ஒரு மேஜையைப் போட்டு அதன் மேல் ஏறி நின்று பேசினார் ரவீந்திரன்.

''உலகத்திலேயே கொலைகளுக்கும் - கொள்ளைகளுக்கும் பெயர் போன நகரம் அமெரிக்காவின் நியூயார்க்தான். அந்தப் பெருமையை முறியடிக்கும் வகையில் நமது நகரம் அந்தச் செயல்களில் முன்னேறி வருகிறது. தங்க நகையைப் போட்டுக் கொண்டு எந்தப் பெண்ணும் ரோட்டில் நடக்க முடியவில்லை. பெண்கள் வீடுகளில் தனியாய் இருக்க பயப்படுகிறார்கள். பஸ்ஸில் ஏறினால் பிக்பாக்கெட் பேர்வழி. ரோட்டில் நடந்தால் வழிப்பறிக் காரன். ராத்திரி நேரங்களில் நிம்மதியாய் தூங்க முடிவதில்லை. முகமூடிக் கொள்ளைக்காரர்கள் கதவை உடைக்கிறார்கள். நகரில் ரௌடிகள் சாம்ராஜ்யத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது போலீஸ் அதிகாரிகளும் - அரசு அதிகாரிகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை. நான் கலெக்டரையும், போலீஸ் கமிஷனரையும் நான்கைந்து முறை சந்தித்துப் பேசிவிட்டேன். எப்போது பேசினாலும் தீவிர நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருப்பதாய் சொல்கிறார்கள். ஆனால் குற்றங்கள் குறைந்தபாடில்லை. உரமிட்ட பயிராய் நாள்தோறும் அது செழித்து வளருகிறது. இதற்கு என்ன காரணம் இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. போலீஸ் மனம் வைத்தால் குற்றவாளிகளைக் கைது செய்ய முடியாதா... என்ன? இன்ன பஸ்ஸில் பிக்பாக்கெட் அடிக்கப்பட்டது என்றால்... அடித்தவன் யார் என்பது போலீசுக்குத் தெரியும். அதேபோல் ஒரு குறிப்பிட்ட ஏரியாவில் திருட்டுப் போய்விட்டதென்றால் அந்தத் திருட்டை நடத்தியவன் யார் என்பதும் போலீசுக்குத் தெரியும். தெரிந்திருந்தும் போலீசார் ஏன் மௌனமாக இருக்கிறார்கள்...? அவர்களின் கைகளைக் கட்டிப் போட்டது யார்...? இந்த உண்மை வெளிச்சத் துக்கு வரவேண்டும்...''

கும்பல் கைகளைத் தட்டியது.

கூட்டத்துக்கு பாதுகாப்பாய் வந்திருந்த டி.எஸ்.பி. கும்பலுக்குள் புகுந்து - எக்ஸ் எம்.எல்.ஏ. ரவீந்திரனை நெருங்கினார்.

''மிஸ்டர் ரவீந்திரன். ஊர்வலம் நடத்த உங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நேரம் முடிஞ்சுடுச்சு... எல்லோரையும் கலைந்து போகச் சொல்லிடுங்க...''

''இன்னும் ஒரு பத்து நிமிஷம்... குடுங்க... பேச்சை முடிச்சுடறேன்...''

''ஸாரி... இனிமே நீங்க பேச முடியாது. நிமிஷத்துக்கு நிமிஷம் கும்பல் அதிகமாயிட்டே வருது. கலெக்டர் ஆபீசுக்கு முன்னாடி இவ்வளவு பெரிய கும்பல் இருக்கிறது சரியில்லை. கலைந்து போகலாம்னு அனௌன்ஸ் பண்ணுங்க...''

''இது மிரட்டல் கோரிக்கையா...?''

''எப்படி வேணும்ன்னாலும் வெச்சுக்கலாம்...''

''மன்னிக்கணும் டி.எஸ்.பி. சார்... நான் பேச்சை முடிக்காம கூட்டம் கலையாது...''

''நீங்க பேசக்கூடாது...''

''பேசுவேன்...''

''வேண்டாத விபரீதங்கள் நிகழும்...''

''தினம் தினம்தான் இந்த ஊர்ல ஒரு விபரீதம் நிகழ்ந்திட்டு வருதே. அதை மொதல்ல தடுங்க ஸார்...''

''யூ ஆர் டாக்கிங் டூ மச்...''

''நாங்க அதிகம் பேசினதால்தான் ஆட்சியையே பிடிச்சோம்...''



''முடிவா என்ன சொல்றீங்க...? கும்பல் கலையுமா கலையாதா...?''

''என் பேச்சு முடியாமே கும்பல் கலையாது...''

டி.எஸ்.பி. திரும்பி - சற்று தொலைவில் - கைகளில் பிரம்புக் கேடயங்களோடும், லத்திகளோடும் நின்றிருந்த ஒரு வரிசைப் போலீசைப் பார்த்துக் கத்தினார்.

''ஜார்ஜ் தெம்...''

பாய்ந்தார்கள்... கும்பலை நொறுக்க ஆரம்பித்தார்கள்.

## 13

திருவனந்தபுரம் போய் - நாராயணனைப் பற்றி விசாரித்து விட்டு - அன்றைக்குத்தான் திரும்பியிருந்தார் இன்ஸ்பெக்டர் ஜார்ஜ். கமிஷனர் கூப்பிட்டு விசாரித்தார்.

''என்ன ஜார்ஜ் ஏதாவது பிரயோஜனமான தகவல் உண்டா?''

''நாராயணனைப் பற்றி அங்கே இருக்கிற நபர்கள் யாருக்குமே சரியா தெரியலை ஸார்... அவன் நேந்திர வறுவல் வியாபாரம் பண்ணிட்டிருந்த ஹோட்டல் வாசலுக்குப் போனேன். ஹோட்டலிலேயும் விசாரிச்சேன்... உபயோகமான தகவல் இல்லை... கேரள போலீசை வெச்சு வீட்டோட பூட்டையும் உடைச்சு... உள்ளே கிளறினேன். பேங்கிலிருந்து அவன் பணம் ட்ரா பண்ணினதுக்கு அடையாளமாய் பாஸ்புக் குறிப்பு ஒண்ணு கிடைச்சது அவ்வளவுதான்...''

''எவ்வளவு பணம் ட்ரா பண்ணியிருக்கான்?''

''அறுபதாயிரம் ரூபா...''

''ட்ரா பண்ணின தேதி?''

''அவன் கொலையானதுக்கு முந்தின தினம்.''

''அப்படின்னா அவன் பணத்தை ட்ரா பண்ணிட்டு கோயமுத்தூருக்கு வந்ததை யாரோ தெரிஞ்சுகிட்டு ஃபாலோ பண்ணி வந்திருக்காங்க...''

''ஆமா ஸார்...''

''சமீபகாலமாய் சிட்டியில் வழிப்பறிகளை பண்ணிட்டிருக்கும் ஒரு கும்பல்தான் நாராயணனோட கொலைக்கும் ராதிகாவோட கொலைக்கும் காரணமாயிருப்பாங்கன்னு நான் நினைக்கிறேன்... அந்த கும்பலை உடனடியாக நாம் ட்ரேஸ் அவுட் பண்ணியாகணும். இல்லேன்னா... தமிழ்நாடு தழுவிய அளவில் வெடிக்கப் போகிற பெரிய போராட்டத்தை நாம் ஃபேஸ் பண்ண வேண்டியிருக்கும்...''

''ஸார்... இந்த வார 'சாட்டை அடி' அரசியல் வார இதழைப் படிச்சிங்களா...?''

''இல்லை... ஏன்...?''

''இந்த வழிப்பறிக் கும்பல் யாரோட கண்ட்ரோல்ல இருக்குங்கிறதை மறைமுகமாக சொல்லியிருக்காங்க...''

''என்னான்னு...''

''ஜனநாயக வளர்ச்சிக் கழகம் கட்சியைச் சேர்ந்த பிரமுகரோட மச்சினன். இந்த வழிப்பறிகளையும் கொலைகளையும் பண்ணிட்டிருக்கிறதாய் கேள்வி...''

''நம்பாதீங்க... அதெல்லாம் சும்மா. பத்திரிகை பரபரப்பா விக்கணும்ங்கிறதுக்காக... பத்திரிகைக்காரங்க எதையாவது எழுதிட்டு இருப்பாங்க. அதையெல்லாம் நாம சீரியஸா எடுத்துக்கக் கூடாது...''



டி.எஸ்பி. நுழைந்து சல்யூட் செய்தார். கமிஷனர் கலைந்து அவரை ஏறிட்டார்.

''என்ன நிலவரம்?''

''அந்த மாஜி எம்.எல்.ஏ. ரவீந்திரன் ரொம்ப பிடிவாதமா இருக்கார் ஸார்... கலெக்டர் ஆபீசுக்கு முன்னாடி கண்டிப்பாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தே தீருவாராம்...''

''லத்தி சார்ஜில் மனுஷனுக்கு எந்தக் கை பிராக்ச்சர்?''

''இடது கை சார்...''

''நேத்திக்கு நீங்க கும்பலை கலைக்க லத்தி சார்ஜ் குடுத்திருக்கக் கூடாது... குடுத்தது பெரிய தப்பு...''

''ஸாரி ஸார். நேத்திக்கு அந்தக் கும்பலை கலைக்காமே இருந்திருந்தா... கலெக்டர் ஆபீஸை சூறையாடியிருப்பாங்க...''

''நோ... ஐ வோண்ட் அக்ரி வித் யூ...''

டி.எஸ்.பி. மௌனமாய் நின்றிருந்தார். கமிஷனர் தொடர்ந்து இரைந்தார். ''அந்த உண்ணாவிரதப் போராட்டத்தை எப்படியாவது வாபஸ் வாங்க வைக்க வேண்டியது உங்க பொறுப்பு...''

''எஸ் ஸார்...''

''ஜார்ஜ் நீங்களும் போங்க...''

சல்யூட்களை அடித்துவிட்டுக் கிளம்பினார்கள். அவர்கள் போனதும் - கமிஷனர் இண்டர்காமின் ரிஸீவரை எடுத்தார். அஸிஸ்டெண்ட் கமிஷனரைத் தொடர்பு கொண்டார்.

''மிஸ்டர் பிரசாத்... ஒரு நிமிஷம் என்னோட ரூமுக்கு வந்துட்டுப் போங்க...''

பிரசாத் வந்தார்.

சல்யூட் ஒன்றை விநியோகித்துவிட்டு நின்றார்.

''ப்ளீஸ் சீட்டட்...''

உட்கார்ந்தார்.

''சாட்டை அடி'' அரசியல் வார இதழில் வழிப்பறிச் சம்பவங்களுக்கு காரணமானவங்க ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு அரசியல் பிரமுகரோட மச்சினன்னு எழுதியிருக்காங்களாம்... அந்த மேட்டரை சீரியஸா ஃபாலோ அப் பண்ணி நாளைக்கு காலையில எனக்கு ரிப்போர்ட் குடுங்க...''

''எஸ்... ஸார்...''

''இட் ஷுட் பி கான்ஃபிடென்ஷியல்''

அவர் தலையாட்டினார்.

## 14

சாமியானோ பந்தலுக்கு கீழே ஜமுக்காளம் விரித்து - மாஜி எம்.எல்.ஏ. ரவீந்திரன் ஒடிந்த கையோடு உட்கார்ந்திருக்க - சுற்றிலும் தொண்டர்கள் கோஷம் போட்டார்கள்.

''போலீஸ் அராஜகம்...''

''ஒழிக''

''குற்றவாளிகளுக்குத் துணைபோகும் போலீஸ்...''

''ஒழிக...''

''அநியாயத்தை எதிர்க்கும் அடலேறு.. அண்ணன் ரவீந்திரன்...''

''வாழ்க''



''நியாயம் கேட்டோம்...''

''ரத்தம் சிந்தினோம்...''

''ரத்தம் சிந்தியேனும்...''

''நியாயத்தை நிலை நிறுத்துவோம்...''

கலெக்டரின் கார் வருவதைப் பார்த்ததும் - கோஷம் இன்னமும் அதிகப்பட்டது கலெக்டர் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கினார்.

ரவீந்திரனிடம் வந்தார்.

கோஷம் உச்சக்கட்டத்தை தொட்டது.

ரவீந்திரன் கையமர்த்த - கும்பல் கோஷத்தை நிறுத்திக் கொண்டது கலெக்டர் கையைக் குவித்தார்.

''வணக்கம் மிஸ்டர் ரவீந்திரன்.''

''வணக்கம்''

''உங்க கோரிக்கையை முதலமைச்சருக்கு அனுப்பி யிருக்கேன்...''

''அதனால என்ன பிரயோஜனம்?''

''விரைவில் நடவடிக்கை எடுப்பாங்க...''

''எனக்கு நம்பிக்கையில்லை...''

''ரவீந்திரன்! இப்படி நீங்க அடம்பிடிக்கிறது சரியில்லை... நீங்க இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை...''

''லத்தி சார்ஜ் நடந்தது நியாயம்னு சொல்ல வர்றீங்களா...?''

''சட்ட விரோதமா கும்பல் கூடறது தப்பில்லையா...?''

"நகரத்தில் சட்டமும் ஒழுங்கும் கெட்டுக் கிடக்கிறதுனாலதான் நான் போராட்டத்தையும் ஊர்வலத்தையும் நடத்தினேன். என்னோட எதிர்ப்புகளை ஜனநாயக முறையில்தான் காட்டினேன்... அது தப்பா?"

"நீங்க உண்ணாவிரதத்தை உடனடியா நிறுத்தணும்ங்கிறது முதலமைச்சரோட கோரிக்கை..."

"ஏர்க்கண்டிஷன் ரூம்ல உட்கார்ந்துகிட்டு கோரிக்கை விடறது ஒண்ணும் கஷ்டமான காரியமில்லை... குற்றவாளிகளைப் போலீசுக்குத் தெரியும். அவங்களைப் பிடிக்கிறதுல மெத்தனம் காட்டறாங்க... அவங்க கைது செய்யப்படும்வரை நான் உண்ணாவிரதத்தை நிறுத்த மாட்டேன்..."

கலெக்டர் தோள்களைக் குலுக்கி ஒரு பெருமூச்சோடு நகர கும்பல் மறுபடியும் கோஷிக்க ஆரம்பித்தது.

"போலீஸ் அராஜகம்..."

"ஒழிக..."

"அண்ணன் ரவீந்திரன்..."

"வாழ்க..."

"சட்டத்தை சிதைக்கும் குற்றவாளிகளை..."

"கைது செய்..."

"மிருகத்தனமாய் அடித்த போலீஸ் அதிகாரிகளை"

"சஸ்பெண்ட் செய்..."

"போராடுவோம்... போராடுவோம்.."

"வெற்றி பெறும் வரை போராடுவோம்..."



கோஷங்கள் தீப்பிழம்பாய் வெடித்துச் சிதற ரோட்டின் ஓரத்தில் நின்றிருந்த ஜீப்பிலிருந்து டி.எஸ்.பி.யும். இன்ஸ்பெக்டர் ஜார்ஜும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

## 15

"அஹ்மத்..."

"..."

"அஹ்மத்! உன்னைத்தாண்டா..."

ஜன்னல் வழியே இருட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அஹ்மத் அறை நண்பன் ஸ்ரீதரின் குரல் கேட்டுத் திரும்பினான்.

"உம்..."

"நான் ஊருக்குப் போய்ட்டு வர்றேன்..."

"உம்"

"எப்படியும் திங்கட்கிழமை வந்துடுவேன்..."

"ம்..."

"அஹ்மத்" ஸ்ரீதர் அவனுடைய தோளைத் தொட்டான். "அந்த ராதிகாவை நினைச்சுட்டிருக்கிறதுல... இனிமே பிரயோஜனம் இல்லை... மனதை தேத்திக்க. நீயும் வேணும்ன்னா உன்னோட ஊருக்குப் போயிட்டு வா..."

அஹ்மத் தலையாட்டினான்.

"நான் எங்கேயும் போகலை..."

"அப்படின்னா மனசை தேத்திக்கிட்டு சகஜமா இரு..."

"முடியலையே..."

"உன்னோட உருவத்தை கண்ணாடியிலே ஒரு நிமிஷம் பாரு... இந்த ஒரு வாரத்துக்குள்ளே உடம்பு எப்படி உருக்குலைஞ்சு போயிருக்குன்னு உனக்கே தெரியும்..."

அஹ்மத் பேசாமல் இருந்தான்.

ஸ்ரீதர் மறுபடியும் அவனுடைய தோளைத் தொட்டான்.

"டேய்..."

"ம்..."

"நான் வரட்டுமா..?"

"ம்..."

"நேரத்துக்கு சாப்பிடு..."

"ம்..."

ஸ்ரீதர் அவனுக்குத் தெரியாமல் தலையில் அடித்துக் கொண்டு சூட்கேஸை எடுத்துக் கொண்டு கிளம்பினான். அவன் கிளம்பிப் போகும் வரை காத்திருந்த அஹ்மத் பின் மெதுவாய் எழுந்தான். கதவை சாத்திவிட்டு - மேஜை டிராயருக்கு வந்து - வெள்ளைத் தாளும் பேனாவுமாய் எழுத ஆரம்பித்தான்.

*போலீஸ் துறைக்கும் என்னைப் பெற்றவர்களுக்கும் இந்த அஹ்மத்தின் கடைசி வணக்கம். என் ராதிகா இறந்து போய் இன்றைக்கு ஒரு வாரம் ஓடிவிட்டது. பூப் போன்ற என் ராதிகா காரணமில்லாமல் சாகடிக்கப் பட்டிருக்கிறாள். அவளுடைய மரணம் எனக்கு ஆறாத ரணம். மற்றவர்களுக்கு அசாதாரணம். என் ராதிகாவை என்னால் மறக்க முடியாது. அவளை நான் மறக்க வேண்டுமென்றால் - நான் மரிக்க வேண்டும்.*



*தற்கொலை செய்வது கோழையின் செயல் என்று மற்றவர்கள் சொல்லலாம். காதல் தோல்விக்குப்பின் எந்த ஒரு வீரனும் கோழையே. நான் சாகிறேன். என் சாவுக்கு யாரையும் காரணமாக்க வேண்டாம்.*

*இப்படிக்கு*
*ராதிகாவைத் தேடிப் பயணத்தை*
*மேற்கொள்ளும்*
*அஹ்மத்*

எழுதி முடித்த கடிதத்தை ஒருமுறை படித்துப் பார்த்து நான்காக மடித்து சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு அஹ்மத் எழுந்தான். அறையைப் பூட்டிக் கொண்டு இருட்டில் இறங்கி நடந்தான்.

## 16

டெலிபோன் சிணுங்கியது.

சிகரெட் புகையில் இருந்த கமிஷனர் இடது கையில் ரிஸீவரை எடுத்தார்.

"யெஸ்..."

"ஸார்... நான் பிரசாத்..." மறுமுனையில் ஏ.சி. பேசினார்.

"சொல்லுங்க மிஸ்டர் பிரசாத்..."

"ஸார் அந்த சாட்டை அடி வார இதழில் வந்த நியூஸ் ஓரளவுக்கு உண்மையாய் இருக்கலாம்னு என் மனசுக்குப் படுது..."

"எப்படி...? க்ளோஸ் ஃபாலோ அப் பண்ணீங்களா...?"

"என்னோட இன்ஃபார்மரை வெச்சு... தகவல்களைக் கலெக்ட் பண்ணினேன். அந்த ஆளுங்கட்சி பிரமுகர் வேறு யாருமில்லை

ஸார்... போன எம்.பி. எலெக்ஷன்ல தோத்துப் போன ராஜவேலு. ஆட்சிக்கு எந்தக் கட்சி வந்தாலும் சரி... உடனே அதுக்குத் தாவிடுவார். அவரோட மச்சினர் பெரியசமி செங்கல்பட்டுல பேட்டை ரௌடியா இருந்தவன்... எல்லா சட்ட மீறல் வேலைகளையும பண்ணக்கூடிய ஆள்தானாம்...''

''ஆளை வாட்ச் பண்ண ஸ்க்வாட் ஒண்ணு போட்டுருங்களேன்... அப்படியே ராஜவேலுவையும் கவனிங்க... சந்தேகம் வர்ற மாதிரி எந்த நடவடிக்கையும் வேண்டாம்...''

''எஸ்... ஸார்...''

''நாலைஞ்சு நாளா... சிட்டியில் நாம தீவிரமா இருக்கிறது... மனசுக்கு சந்தோஷமா இருக்கு. எதிரிகள் உஷாராகி தலைமறைவாயிட்டாங்கன்னு நினைக்கிறேன். இப்போது நாம் கடைபிடிக்கிற இதே தீவிர கண்காணிப்பை கடைசி வரைக்கும் மெய்ண்டைன் பண்ணனும் மிஸ்டர் பிரசாத்...''

''வி... வில்... டூ... இட்... ஸார்...''

## 17

**உ**ண்ணாவிரதப் பந்தலில் - ரவீந்திரன் சோர்ந்து படுத்திருக்க - போலீஸ் ஜீப் சைரனோடு - அந்தக் கார் பந்தலுக்கு முன்பாய் வந்து நின்றது.

''அண்ணே! மினிஸ்டர் வர்றாரு...''

ரவீந்திரன் கண்களைத் திறக்க...

அமைச்சர் வெள்ளை வேஷ்டி வெள்ளை சர்ட் தோளுக்கு போர்த்திக் கொண்ட சாக்லேட் நிற சால்வையோடு காரினின்று



இறங்கி - போலீஸ் சூழ வந்தார். பின்னால் கலெக்டரின் முகம் தெரிந்தது.

யாரோ நாற்காலியை எடுத்துப் போட - அமைச்சர் உட்கார்ந்து ஒரு சிநேகித உணர்வோடு - ரவீந்திரனின் தோளைத் தொட்டார்.

''என்னங்க... ரவீந்திரன்... இந்தப் பிடிவாதம் உங்களுக்குத் தேவைதானா...?''

ரவீந்திரன் சிரித்தார். ''சில நியாயங்களை இப்படிப் பிடிவாதம் பிடிச்சுத்தான் வாங்க வேண்டியிருக்கு...''

''உங்களோட நியாயமான கோரிக்கையையெல்லாம் இந்த அரசு பரிவோடு பரிசீலிக்கும்... முதலமைச்சர் சொல்லித்தான் நான் இங்கு வந்திருக்கேன்... அவங்க எனக்கு கொடுத்த டெலிகிராம் செய்தியைப் பார்க்கறீங்களா...?'' சொன்னவர் தன் அருகில் இருந்த பி.ஏ.வை ஏறிட்டார். பி.ஏ. ஃபைலில் வைத்திருந்த தந்தியை எடுத்த ரவீந்திரனிடம் நீட்டினார். ரவீந்திரன் வாங்கிப் பார்த்துவிட்டு 'சந்தோஷம்' என்றார்.

''இன்னும் ரெண்டு மூணு நாள்ல குற்றவாளிகளைப் பிடிக்க போலீஸ் எல்லாவகையான முயற்சிகளையும் எடுக்கும்...''

''நம்பலாமா..?''

''தாராளமாய் நம்பலாம். முதலமைச்சர் சற்குணம் உங்க கோரிக்கைகளைக் கண்டிப்பாக நிறைவேற்றுவார்...''

''லத்தி சார்ஜ் பண்ணின போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கணும்...''

''கண்டிப்பா எடுப்பார்...'' சொன்ன அமைச்சர் பி.ஏ.வை மறுபடி பார்க்க - அவர் எலுமிச்சை ஜூஸ் நிரம்பிய கண்ணாடி டம்ளரை எடுத்துக் கொடுத்தார்.

''குடிச்சு உண்ணாவிரதத்தை மொதல்ல நிறுத்துங்க...''

ரவீந்திரன் வாங்கிக் கொண்டு கண்ணாடி டம்ளரை உதட்டுக்கு கொடுக்க - சுற்றியிருந்தவர்கள் கைதட்டினார்கள்.

''அண்ணன் ரவீந்திரன்...''

''வாழ்க!''

ஜூஸை ஒரே மூச்சில் குடித்து முடிந்த ரவீந்திரனின் கைகளைப் பற்றி குலுக்கினார் அமைச்சர். ''உண்ணாவிரதத்தை நிறுத்தினதுக்கு நன்றி. இன்னிக்கு மத்தியானம் நீங்க என்கூடத்தான் லஞ்ச் சாப்பிடறீங்க... வாங்க... காருக்குப் போவோம்...''

ரவீந்திரன் அவருடைய கையைப் பற்றிக் கொண்டு எழுந்தார்.

## 18

அஹ்மத் அந்த ஹைவேஸ் நெடுஞ்சாலையில் ஓரமாய் நடந்து புளிய மரங்கள் அடர்த்தியாய் இருந்த அந்தப் பகுதிக்கு வந்தான். நட்சத்திர வானத்தில் உடைந்த நிலா ஒரு கண்ணாடி சில்லு மாதிரி வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

சாலையோர பூங்கா என்ற பெயரில் - பார்த்தீனிய செடிகள் மண்டியிருந்த பரப்பைத் தாண்டி - புளிய மரங்களுக்கு கீழே நடந்து - வசதியான மரம் பார்த்து அதன் அடிப்பரப்புக்கு சாய்ந்து உட்கார்ந்தான்.

மார்புப் பகுதியில் வைத்திருந்த - சின்னஞ்சிறு விஷப் பாட்டிலை எடுத்து இடது கையில் அடக்கிக் கொண்டான். சட்டைப் பாக்கெட்டில் இருந்த ராதிகாவின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை எடுத்து அந்த மங்கிய வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தான்.

கண்கள் நீரால் நிரம்பியது.



''ராதிகா நானும் வர்றேன்... நீ இல்லாத இந்த உலகம் எனக்கு சூன்யம். இந்த நிசப்தமான இடத்துல... நிம்மதியா சாகப் போறேன்... ரூமுக்குள்ளே... என்னால சாக முடியாது. எனக்கு ஆறுதல் சொல்கிற சாக்கில் யாராவது வந்துட்டே இருப்பாங்க... என்னைக் காப்பாத்திருவாங்க... இங்கே யாரும் வரமாட்டாங்க... நிம்மதியா... உன்னை நினைச்சுட்டே!'' ராதிகாவின் போட்டோவில் அஹ்மத்தின் கண்ணீர் பட்டு சிந்தியது.

விஷப்பாட்டிலின் மூடியைத் திறந்தான் அஹ்மத். சட்டைப் பையில் தற்கொலைக் கடிதம் இருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துக் கொண்டான். பின் பாட்டிலை உதட்டுக்கு கொண்டு போனான்.

அதே விநாடி...

அந்த சத்தம் கேட்டது.

''த்தட்... த்தட்... த்தட்...''

அஹ்மத்துக்கு உடனே புரிந்தது.

அது ஒரு மோட்டார் பைக் சத்தம்.

திரும்பினான்.

மங்கலான ஹெட்லைட் வெளிச்சத்தோடு - அந்த பைக் சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்தது.

''வருவது யார்?''

அஹ்மத் பதட்டமாய் எழுந்து - மரத்துக்குப் பின்னால் ஒண்டினான். பைக் கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கி - அஹ்மத் ஒளிந்திருந்த மரத்திற்கு தள்ளி நின்றது. பில்லியனில் உட்கார்ந்திருந்தவன் இறங்கினான்.

''அப்ப... நான் வரட்டா சோமு...''

முன்னால் உட்கார்ந்திருந்தவன் சிரித்தான்.

''கண்டிப்பா... நீ கண்ணம்மா வீட்டுக்குப் போய்த்தான் ஆகணுமா?''

''ஆமா...?''

''நாளைக்குப் போய்க்கக் கூடாதா?''

''அவ காத்திட்டிருப்பாளே?''

''அவ என்ன உனக்குத் தாலி கட்டின பொண்டாட்டியா காசைக் கொடுத்தா கடை விரிக்கிற கேஸ்தான அவ...''

''சோமு! கண்ணம்மாவைப் பத்தி மட்டமா பேசாதே...''

''சரி... சரி... கோபப்பட்டுக்காதே! ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ஞாபகத்துல வெச்சுக்க... அவ அணைப்புல மயங்கிக் கிடக்கறப்போ இன்னைக்கு அடிச்ச நகைகளைப் பற்றி சொல்லிடாதே...''

''நான் சொல்ல மாட்டேன்...''

''அன்னிக்கு இப்படித்தான் சொல்ல மாட்டேன்னு சொல்லிட்டு அந்த ராதிகாவை தீர்த்துக்கட்டின விஷயத்தை அவகிட்டே உளறிக் கொட்டிட்டே...''

''அன்னிக்கு சரக்கு கொஞ்சம் ஓவர்... அதான் எக்குத்தப்பா சொல்லிட்டேன்...''

''சரி... நாளைக்கு காலையில தலைவர் வீட்டுக்கு வந்துடு அடிச்ச சரக்கை ஒப்படைச்சுடலாம்...''

''ம்...ம்...''

அவன் தலையாட்ட

பைக் நகர்ந்தது - வேகம் எடுத்தது. அது மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த பில்லியன் ஆசாமி - சிகரெட் ஒன்றை பற்ற



வைத்துக் கொண்டு எதிரே தெரிந்த ஒற்றையடிப் பாதைக்குள் நுழைந்தான்.

அஹ்மத் அவனையே வெறித்தான்.

இரண்டு பேரும் என்ன பேசிக் கொண்டார்கள்?

பேச்சில் ராதிகாவின் பெயர் அடிபட்டதே?

அது என் ராதிகாதானா...?

இருக்கலாம்! இவர்களைப் பார்த்தால் நல்லவர்களாத் தெரியவில்லை.

அஹ்மத்தின் உடம்பில் ஆத்திரமான ரத்தம் பாய்ந்து அவனை அலம்பியது. விஷப்பாட்டிலை மூடி மார்புச் சட்டைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டவன் - அவனை சத்தம் காட்டாமல் பின்தொடர்ந்தான்.

## 19

வெளியில் எங்கோ போய்விட்டு ஸ்டேஷனுக்கு திரும்பிய - இன்ஸ்பெக்டர் ஜார்ஜ் - தனக்காக அந்த மரப்பெஞ்சில் உட்கார்ந்தபடி காத்திருந்த - இளைஞனைப் பார்த்ததும் நெற்றியைச் சுருக்கினார்.

''யார்...?''

''ஸார்... நான் ஸ்ரீதர். அஹ்மத்தோட ரூம்மேட். ஒரு தடவை விசாரணை பண்ண ரூமுக்கு வந்திருக்கீங்க...''

''எஸ்... எஸ்... ஞாபகம் வருது. என்ன விஷயம்?''

''ஸார்...! நான் அவசரமா ஊருக்குப் போக வேண்டிய கட்டாயம். அஹ்மத் ரொம்பவும் மனசு இடிஞ்சு போன நிலைமையில்

இருக்கான். தன்னை மறந்து தூங்கற நேரம் தவிர - எந்த நிமிஷமும் அவனுக்கு ராதிகாவோட நினைப்புத்தான்... ரெண்டு தடவை தற்கொலைக்கு முயன்ற அவனைக் காப்பாத்தியிருக்கேன். இப்ப நான் ஊருக்குப் போயிட்டா அவன் மட்டும் ரூம்ல தனியா இருப்பான். தனியா இருக்கிறதுனால அவன் மறுபடியும் தற்கொலை செய்ய முயற்சி பண்ணலாம்... நீங்க ஒரு கான்ஸ்டபிளை அனுப்பி அவனைக் கண்காணிக்கறது ரொம்ப நல்லதுன்னு நினைக்கிறேன்...''

''நீ எப்ப ஊர்லயிருந்து திரும்புவ...?''

''திங்கட்கிழமை...''

''சரி.. ஏற்பாடு பண்ணிடறேன்...''

''தேங்க்யூ சார்...'' ஸ்ரீதர் கைகளை குவித்துவிட்டு கால்களுக்கு கீழே வைத்திருந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

## 20

மெலிதான இருட்டில் - சிகரெட் பிடித்தபடி நடந்து போய்க் கொண்டிருந்த அவனை - அஹ்மத் ஆவேசமாய் பாய்ந்து போய் அவனுடைய சட்டைக் காலரை இறுக்கிப் பிடித்தான்.

''ராஸ்கல் நில்லுடா...''

கையிலிருந்த சிகரெட் உதிர அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். திமிறிக் கொண்டு திணறும் குரலில் கேட்டான்.

''ஏ... ஏய்... யார்... நீ...?''

அஹ்மத் அவனை உலுக்கினான். ''சொ... சொல்லு என் ராதிகாவைக் கொன்னது... நீதானே?''



அவன் முகம் அதிர்வது இருட்டிலும் தெரிந்தது. அஹ்மத் மூர்க்கமாய் உலுக்கினான். ''சொல்லு... என் ராதிகாவைக் கொன்னது நீதானே?''

''ஏ... ஏய்... விடு...''

அவன் சொல்லிக் கொண்டே தன் இடுப்பின் மறைவிலிருந்த ரிவால்வரை எடுக்க - அஹ்மத் கவனித்து உடனே முழங்காலை உயர்த்தி அவனுடைய வயிற்றில் இடித்தான்.

''ஹம்மா...''

அவன் மல்லாந்து கீழேவிழ -

சிதறிய துப்பாக்கியை - தாமதிக்காமல் பொறுக்கிக் கொண்டான் அஹ்மத். எழ முயன்றவனின் மார்பின் மேல் காலை வைத்து ஊன்றி துப்பாக்கியால் குறி பார்த்தான்.

''சொல்லு... என் ராதிகாவைக் கொன்னது நீதானே...?''

''ரா... ராதிகாவா? யாரது...?''

''ட்டுமீல்...''

தோட்டா மல்லாந்து கிடந்தவனின் வலது காதுக்குப் பக்கத்தில் மண்ணைச் சிதறடித்துக் கொண்டு வெடித்தது. ''நீயும் .பைக்குல வந்தவனும் பேசினதை நான் கேட்டுட்டேன்... எனக்கு இப்ப உண்மை வரணும். என்னோட ராதிகாவை எதுக்காகக் கொன்னீங்க...?''

அவன் வாய் உலர்ந்தான்.

''எ... என்னைச் சுட்டுடாதே...''

''அப்படின்னா உண்மையைச் சொல்லு...''

''ராதிகாவைக் கொன்னது நானில்லை...''

"வேற யாரு...?"

"சோமு..."

"அது யாரு...?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி பைக்ல வந்தவன்..."

"எதுக்காகக் கொன்னான்...?"

அவன் மெளனிக்க அஹ்மத் வயிற்றில் ஓங்கி மிதித்தான்.

"ஹம்மா... ஆ..."

"சொல்லு..."

அவன் திணறித் திணறி சொன்னான். "திருவனந்தபுரத்திலிருந்து நாராயணன்னு ஒருத்தன்... ராம்ஜே பைனான்சில் அம்பதாயிரம் ரூபாயை டெபாசிட் பண்ண வந்தான். பஸ்ஸ்டாப்பில் இருந்து அவனை ஃபாலோ பண்ணினோம்... அவனை மடக்க வசமான இடம் கிடைக்கலை... பைனான்சிங் கார்ப்பரேஷன் கட்டிடத்துக் குள்ளே நுழைந்தான். டாய்லெட்டுக்கு அவனைத் தள்ளிக்கிட்டுப் போய் - ஆளைத் தீர்த்து பணத்தை பறிக்க முயற்சி பண்ணினோம். நாராயணன் நாங்க ஃபாலோ பண்றதை தெரிஞ்சிட்டு - எங்களை ஏமாத்ததறதுக்காக ரிக்கார்ட் ரூம்ல நுழைஞ்சான். நாங்களும் உள்ளே நுழைஞ்சோம். ரிக்கார்டு ரூம்ல ஃபைலை எடுத்துப் பார்த்துக்கிட்டிருந்த ராதிகா - எங்களைப் பார்த்ததும் சத்தம் போட முயற்சி பண்ணினா. உடனே தன் கையில் வெச்சிருந்த இரும்புக் குழாயாலே - அவ தலையில் அடிச்சான். நான் நாராயணனை அடிச்சேன். ரெண்டு பேரும் அந்தக் கணமே இறந்துட்டாங்க. ராதிகா உடம்பிலிருந்த நகைகளைப் பறிச்சுக்கிட்டு - ரெண்டு பாடியையும் எடுத்து - அலமாரிக்குப் பின்னாடி போட்டுட்டு வந்துட்டோம்..."



அஹ்மத் ஆத்திரமாகி - கீழே கிடந்தவனின் உயிர் நிலையை எட்டி உதைத்தான். "ஹா."

"உம் பேரென்ன...?"

"பரமு..."

"பாவிகளா கடந்த ஆறுமாசமா வழிப்பறிகளையும் கொலைகளையும் பண்ணிட்டு வந்தது நீங்கதானா...? உங்களுக்குப் பின்னாடி ஒரு பிக்ஷாட் இருக்கணுமே! அவன் யாரு...?"

"அ... அப்படி யாரும் இ... இல்லை..."

மறுபடியும் ஒரு மிதி.

பரமு அலறினான்.

"சொல்லு... யாரவன்...?" காது துவாரத்துக்குள் ரிவால்வரின் வாயை நுழைத்தான் அஹ்மத்.

அவன் சொன்னான்.

அஹ்மத் திடுக்கிட்டான்.

## 21

டெலிபோன் மணி அடித்ததும் - ஜார்ஜ் ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"ஸார்... நான் கான்ஸ்டபிள் த்ரீ நாட் ட்டூ பேசறேன்..."

"என்ன அஹ்மத் ரூம்ல இருக்கானா...?"

"ஆளைக் காணோம் ஸார்... ரூம் பூட்டியிருக்கு..."

''வெளியே எங்கேயாவது போயிருக்கலாம்... வெயிட் பண்ணிப் பாரு. அக்கம் பக்கத்துல விசாரிச்சியா...?''

''விசாரிச்சேன் ஸார்... அஹ்மத் எங்கே போனான்னு யார்க்கும் தெரியலை...''

''சரி... இருந்து பாத்துட்டு வா...''

''எஸ் சார்...''

## 22

**மா**ஜி எம்.எல்.ஏ. ரவீந்திரனின் பங்களா.

ஹால் சோபாவில் அவன் மையமாய் உட்கார்ந்திருக்க அரை வட்டமாய் அந்த நான்கு பேர்களும் தெரிந்தார்கள். கைகளில் விஸ்கி டம்ளர்கள்.

''அண்ணே! உங்களுக்கு உடம்பு பூராவும் மச்சம் அண்ணே! அமைச்சரே வந்து அவர் கையாலே ஜூஸ் கொடுத்து - உங்க உண்ணாவிரதத்தை நிறுத்தினாரே... எவ்வளவு பெரிய பப்ளிசிட்டி தெரியுமா உங்களுக்கு...''

ரவீந்திரன் சிரித்தார். ''இதைத்தாண்டா நான் எதிர்பார்த்தேன். இனிமே ஊர்ல எந்த திருட்டு நடந்தாலும் கொலை நடந்தாலும் ஜனங்களும் ஆளுங்கட்சியும் நம்மளை சந்தேகப்பட மாட்டாங்க...''

''அண்ணே... நாலு நாளா... நம்ம ஆட்களைத் தொழிலுக்கே அனுப்பலை... பரமுவையும் சோமுவையும்... ஐஸ்வர்யா காலனிப் பக்கமா அனுப்பி வெச்சேன். எவ்வளவு பவுன் நகையைத் தட்டிட்டு வந்தாங்களோ தெரியலை... ரெண்டு பேருமே சோதாப் பசங்க... எவளாவது பொம்பளை கூப்பிட்டா... உடனே எல்லாவற்றையும் மறந்துட்டு படுக்கப் போயிடுவானுக...''



''தப்பு...''

''என்னண்ணே...?''

''நம்ம கேங்க்ல சில மாற்றங்களைப் பண்ணியாகணும்... அதே மாதிரி தொடர்ந்து இதே ஊர்ல... நம்ம காரியத்தைப் பண்ணிட்டிருக்கக் கூடாது... பக்கத்து ஜில்லாக்களுக்குப் போய் டெண்ட் அடிக்கணும்...''

''நானும் இதைத்தாண்ணே சொல்லலாம்னு இருந்தேன். அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்ண்ணே...''

''என்ன...?''

''நம்ம காரியத்துல ஆளைத் தீர்க்கிற விஷயம் வேண்டாம். நமக்கு வேண்டியது பொருள்... உயிரில்லை... சோமுவும் பரமுவும் - ராதிகா - நாராயணனைத் தீர்க்கப் போய்த்தான்... விவகாரம் பெரிசாச்சு...''

''நீ சொல்றதும் சரிதான். ரெண்டு நாள் கழிச்சு நம்ம ஆட்களை கூப்பிட்டு வெச்சுப் பேசணும்...''

சொல்லிக் கொண்டிருக்கும் போதே-

வாட்ச்மேன் உள்ளே வந்தான்.

''என்ன சின்னச்சாமி...?''

''அய்யா...! அஹ்மத்துன்னு ஒருத்தர் கையில் ஒரு பெரிய ரோஜாப்பூ மாலையோடு வந்து வாசல்ல நின்னுட்டிருக்கார்... உங்களுக்கு மாலையைப் போட்டு வாழ்த்துக்களைச் சொல்லணுமாம்...''

''அப்படியா! அனுப்பய்யா... ஜனங்களோட அன்புக்கும் ஆர்வத்துக்கும் அணை போடக்கூடாது. அவங்களை அலட்சியப் படுத்தக் கூடாது...''

"அண்ணே! உங்களுக்கு காலையிலிருந்து எவ்வளவு மாலைகள் கழுத்துல விழுந்திருக்கும்...?"

"எப்படியும் ஐநூறுக்கு குறையாது..."

"மாலைகளைச் சுமந்து சுமந்து ரெண்டு தோளிலேயும் வலி ஏறியிருக்குமே...?"

"அந்த வலிக்குத்தான் இந்த விஸ்கி மருந்து..."

"இன்னொரு லார்ஜ் ஊத்தட்டுமாண்ணே...?"

"ஊத்து... ஊத்து..."

அஹ்மத் பெரிய ரோஜா மாலையோடு - போர்டிகோ படிகளில் ஏறினான். தயக்கமாய் நடந்து உள்ளே வந்தான்.

ரவீந்திரன் கையசைத்தார்.

"வா... தம்பி... உள்ளே... வா..."

அஹ்மத் மாலையோடு கும்பிட்டான். "ஸார்! அநியாயங்களை எதிர்த்துப் போராட உங்களை மாதிரி ஊருக்கு ஒருத்தர் இருந்தா போதும்... என் ராதிகாவோட மரணத்தை போலீஸ் மெத்தனமா நினைச்சப்ப... நீங்க மட்டும் ஊர்வலமும், போராட்டமும், உண்ணாவிரதமும் நடத்தாமே இருந்திருந்தா... போலீஸ் கேஸை எடுத்து கிடப்புல போட்டிருப்பாங்க..."

ரவீந்திரன் உள்ளுக்குள் அதிர்ந்தாலும் - வெளியே காட்டிக் கொள்ளாமல் - இயல்பாய் பேசினார். "ஓ...! அந்த ராதிகாவை கல்யாணம் பண்ணிக்க இருந்த தம்பியா நீ...? மனசைத் தேத்திக்க தம்பி. அந்தக் கொலைகாரர்களைப் போலீஸ் கண்டுபிடிக்கிற வரைக்கும் நான் ஓயமாட்டேன்..."



மாலையைக் கழுத்தில் வாங்க எழுந்து நின்றார். "மாலையெல்லாம் எதுக்குங்க தம்பி... சும்மா வாய் வார்த்தையில் பாராட்டினா போதாதா...?"

அஹ்மத் மாலையைப் போடாமல் அப்படியே நின்றான்.

"என்ன தம்பி... அப்படிப் பாக்கறீங்க...? மாலைகளைப் போடுங்க..."

அஹ்மத் கசப்பாய் புன்னகைத்தான்.

"மாலையை இப்ப போடக்கூடாது... செத்த பின்னாடிதான் போடணும்..."

"நீ... நீ... நீ... என்ன சொல்றே...?"

"நீ சாகணும்னு சொல்றேன்..." சொன்ன அஹ்மத் ரோஜா மாலைக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த ரிவால்வரை எடுத்து விருட்டென்று ட்ரிக்கரை சுண்டினான்.

"டுமீல்..."

ரவீந்திரன் மார்பு ரத்தமாய் மாற - விழிகள் ஸ்தம்பித்தது.

அவர் சரிந்தார். உட்கார்ந்திருந்த மற்ற நான்கு பேரும் சுதாரித்து எழும் முன்பே -

ரிவால்வரை சுண்டினான். அரை வட்டமாய்...

நான்கு தோட்டாக்கள் அடுத்தடுத்து பாய -

நான்கு பேரும் திசைக்கொருவராய் துள்ளி விழுந்தார்கள்.

சத்தம் கேட்டு வாட்ச்மேன் ஓடிவர -

அஹ்மத் அவனுக்கும் ஒரு தோட்டா கொடுத்தான். வாட்ச்மேன் வாய் பிளந்து கதவருகே சாய்ந்ததும்...

பங்களாவில் ஆழமான நிசப்தம்.

## 23

தோட்டாக்களை உடம்பில் வாங்கிக் கொண்டு - ரத்த வெள்ளத்தில் ஆறுபேரும் அடங்கிக் கொண்டிருக்க - அஹ்மத் - மெதுவாய் நடந்து போய் டெலிபோன் ரிஸீவரை எடுத்தான். போலீஸ் ஸ்டேஷனைத் தொடர்பு கொண்டு ஜார்ஜிடம் பேசினான்.

''ஸார்... நான் அஹ்மத்...''

''அஹ்மத்! நீயா... எங்கிருந்து பேசறே...?''

''குற்றவாளியோட வீட்டிலிருந்து...''

''குற்றவாளியோட வீடா...? நீ என்ன சொல்றே...?''

''கடந்த ஆறு மாத காலமா... ஊர்ல நடந்திட்டிருந்த குற்றங்களுக்கு மூல காரணமான நபர் வீட்டிலிருந்து பேசறேன்...''

''யாரது...?''

''மாஜி எம்.எல்.ஏ. ரவீந்திரன்...''

''வ்வாட்...!''

''யெஸ்... உங்களுக்கு இப்ப ஏற்பட்ட இதே அதிர்ச்சிதான் அரைமணி நேரத்துக்கு முந்தி எனக்கு ஏற்பட்டது...''

''அஹ்மத் நீ என்ன சொல்றே... ஐ குட் நாட் பிலீவ்...!''

''நம்புங்கள் ஸார்... நான் இப்ப டெலிபோனிலேயே நடந்த விவரங்களை வாக்குமூலமா தர்றேன்... ஏன்னா நீங்க நேர்ல வரும்போது நான் பிணமாத்தான் கிடப்பேன்...''

''அஹ்மத்...''

''ஹியர் மீ இன்ஸ்பெக்டர்...'' - என்று ஆரம்பித்த அஹ்மத் தற்கொலை செய்து கொள்வதற்காக வீட்டை விட்டு புறப்பட்ட



நிமிஷத்திலிருந்து - ரவீந்திரன் கோஷ்டியை சுட்டுக் கொன்ற நிமிஷம் வரைக்கும் நடந்த நிகழ்ச்சிகளை மூன்று நிமிஷ நேரம் செலவழித்துச் சொன்னான்.

ஜார்ஜ் மறுமுனையில் பிரமித்தார்.

''ஆறுபேரையும் ஷூட் பண்ணிட்டியா...?''

''ஆமா... அதுல மூணுபேர் அடங்கிட்டாங்க... மூணு பேர் கொஞ்சம் கொஞ்சமா அடங்கிட்டிருக்காங்க...''

''பரமு...?''

''அவனைக் கனுக்கால்ல சுட்டு காயப்படுத்தி ஹைவேஸ் ரோட்டின் ஆறாவது கிலோமீட்டரில் இருக்கிற புளியந்தோப்பில் - எட்டாம் நெம்பர் மரத்தோடு சேர்த்து கட்டிப் போட்டுட்டு வந்திருக்கேன். ரத்தம் வெளியேறி ஆள் அரை மயக்கத்தில் இருக்கான். உடனே போனா அவனைக் காப்பாத்தலாம்...''

''அஹ்மத்... யூ டோண்ட் டேக் பாய்ஸன்...''

''ஸாரி ஸார்... நான் இப்ப சந்தோஷமா இருக்கேன். இந்த சந்தோஷத்தோடவே செத்துப் போய்... என் ராதிகாவோடு சேர ஆசைப்படறேன். நான் கொடுத்த வாக்குமூலத்தை எல்லாப் பேப்பர்லயும் வரும்படியா ஏற்பாடு பண்ணுங்க... அரசியல் லாபத்துக்காகவும், தன்னுடைய சுயலாபத்துக்காகவும், கொலைகாரனாய்... கொள்ளைக்காரனாய் மாறிய மாஜி எம்.எல்.ஏ. ரவீந்திரனின் கிரிமினல் குற்றங்களை வெளிச்சம் போட்டு காட்டுங்க... நான் புறப்பட்டறேன்... குட் பை...''

சொன்ன அஹ்மத் ரிஸீவரை வைத்துவிட்டு சட்டையின் மார்புப் பகுதியில் இருந்த விஷப் பாட்டிலை எடுத்து - மூடியைத் திறந்து - முகத்தை அண்ணாந்து நிதானமாய் குடிக்க ஆரம்பித்தான்.

* * *